Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 ஆனி -12 26-06-2005 ஞாயிற்றுக்கிழமை ஓசை 128





S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.

T.P: 024-222 4247 (சி-12121)


## பௌத்த பேரினவாதத்தைக் கண்டித்து தென்மராட்சியில் மாணவர் பேரணி!

(தென்மராட்சி)

தமிழ்மக்களின் உரிமைகளை வழங்க மறுக்கும் சிங்கள பௌத்த பேரினவாதத்தை கண்டித்து தென்மராட்சி தமிழ் மாணவர் ஒன்றியத்தினர் மாபெரும் கண்டனப்பேரணி ஒன்றினை நேற்று நடத்தினர்.

சாவகச்சேரி நவீன சந்தை கட்டடத்திற்கு முன்னால் அமைக்கப்பட்ட பந்தலில் காலை 10 மணிக்கு கண்டனக் கூட்டம் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளும், பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் ஆகியோரும் உரையாற்றினர்.

தொடர்ந்து பேரணியானது கண்டி வீதி வழியாக சங்கத்தானை இந்துக்கல்லூரி வரை சென்று நிறைவடைந்தது .

ஊர்வலத்தில் மாணவர்களால் கொண்டுவரப்பட்ட பாடையில் பௌத்த பேரினவாதம்என்று எழுதப்பட்ட பானை சங்கத்தானை சந்தியில் வைத்து மாணவர்களால் உடைத்து அழிக்கப்பட்டது.

இப்பேரணியில் பெருமளவான மாணவர்கள் அரச பயங்கரவாதத்தை கண்டித்து கோசமிட்டவாறும் பதாகைகளை தாங்கியவாறும் அணிவகுத்துச் சென்றனர். (28)



# அரசு—புலிகள் பொதுக்கட்டமைப்பை எதிர்த்து தொடர் போராட்டத்திற்கு ஜே. வி. பி. ஏற்பாடு!

## தொழிற்சங்கங்களை இணைக்கவும் திட்டம்

(கொழும்பு)

**நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்ட பொதுக்கட்டமைப்புக்கு எதிராக தொடர்ச்சியான போராட்டங்களை ஏற்பாடு செய்து நடத்தப்போவதாக ஜே.வி.பி. அறிவித்துள்ளது. அத்துடன் ஜே.வி.பி. சார்பான தொழிற் சங்கங்களை இணைத்து போராட்டங்களை நடத்தவும் ஜே.வி.பி. தீர்மானித்துள்ளது.**

மேலும் பொதுக்கட்டமைப்புக்கு எதிராக மக்களைத் திரட்டி கூட்டங்களை நடத்தவும் ஜே.வி.பி. ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

அகில இலங்கை தொழிற்சங்க கூட்டமைப்பின் நிறைவேற்று அதிகாரிகள் எதிர்வரும் சனிக்கிழமை கூடி இந்த விடயம் தொடர்பாக கலந்

(12 ஆம் பக்கம் பார்க்க)

-சனாதிபதித் தேர்தலை நடத்தக்கோரி -

## பத்து இலட்சம் பேரைத் திரட்டி ஐ.தே.க. ஆர்ப்பாட்டத்திற்கு ஏற்பாடு

(கொழும்பு)

சனாதிபதித் தேர்தலை இந்த ஆண்டுக்குள் நடத்த வலியுறுத்தி ஐக்கியதேசியக்கட்சி சார்பில் எதிர்வரும் 13ஆம் திகதி ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி கடைசியாக நடத்திய மக்கள் போராட்டத்தில் ஐந்து இலட்சம் மக்கள் கலந்து கொண்டனர். எனினும் இம்முறை போராட்டத்திற்கு நாடெங்கிலுமிருந்து சுமார் பத்து இலட்சம் மக்களைத் திரட்டி அவர்களை கொழும்பிற்கு கொண்டு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆழிப்பேரலை பொதுக் கட்டமைப்பில் தேசிய ஐக்கிய முன்னணி அதிருப்தி

(கொழும்பு)

பொதுக் கட்டமைப்பு தொடர்பாக தேசிய ஐக்கிய முன்னணி அதிருப்தி வெளியிட்டுள்ளது.

அக் கட்சியின் பொதுச் செயலாளர் சேகு இசாதீன் கூறியுள்ளதாவது:-

ஆழிப்பேரலையால் பெருமளவில் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை. பொதுக் கட்டமைப்பில் முஸ்லிம் தரப்பினர் குறித்த விபரங்கள் திருப்தி அளிக்கவில்லை.

பிரதேச சபைகளில் ஏழு உறுப்பினர்கள் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்படலாம் என சொல்லப்படுகிறது. இக் குழுவில் முஸ்லிம்களின் விருப்பங்களை சிறிலங்கா அரசும், விடுதலைப்புலிகளும் இணைந்த ஏழு உறுப்பினர்களால் நிராகரிக்க வாய்ப்புக்கள் உள்ளது. இதே நிலைதான் மாவட்ட குழுக்களிலும் உள்ளது. இது குறித்து கட்சித் தலைமையுடன் விவாதித்துள்ளோம்.

பொதுக்கட்டமைப்பு குறித்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பேரவைத் தலைவரின் வீடு மீதான தாக்குதலுக்கு திருமலை அரசியல்துறை பொறுப்பாளர் கண்டனம்

(திருகோணமலை)

திருகோணமலை தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் விக்னேஸ்வரன் வீட்டின் மீது தாக்குதல் இடம்பெற்றதை தமிழீழ விடுதலைப் புலிகளின் திருமலை அரசியல் துறைப்பொறுப்பாளர் எழிலன் கண்டித்துள்ளார்.

தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் வீட்டின் மீது நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதோரால் கிரனைட் வீசப்பட்ட சம்பவமானது உண்மையில் தமிழ் மக்களுக்கு எதிரான ஒரு தாக்குதலுக்கு ஒப்பானதாகும்.

திருமலையில் புத்தர்சிலை விவகாரம்

(12 ஆம் பக்கம் பார்க்க)



## சர்வதேச போட்டிக்குச் செல்லும் தமிழீழ சாதனையாளர்கள் கௌரவிப்பு

(அலுவலகசெய்தியாளர்)

இலங்கை தேசிய மெய்வல்லுனர் போட்டிகளில் பங்கு பற்றி புதிய சாதனைகளை நிலைநாட்டி சர்வதேச ரீதியான போட்டிகளில் பங்கு கொள்வதற்கு தெரிவாகியுள்ள தமிழீழத்தின் சாதனையாளர்கள் இருவரையும் அவர்களைப் பயிற்றுவித்த பயிற்றுனரையும் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அவர்கள் கௌரவித்துள்ளார்.

தமிழீழ விளையாட்டுத்துறையின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை கிளி. விளையாட்டுத்துறை நடுவப் பணியகத்தில் நடைபெற்ற இக் கௌரவிப்பு நிகழ்வில் கடந்த ஏழாம் திகதி கொழும்பில் நடைபெற்ற தேசிய கூட்டு நிகழ்ச்சி சம்பியன் ஷிப் போட்டியின் தசம நிகழ்ச்சியில் பங்கு பற்றி 6164 புள்ளிகளைப் பெற்று

(12 ஆம் பக்கம் பார்க்க)



## வரிவிளம்பரம்

### காணவில்லை

20.06.2005 அன்று புளியங்குளம் சோதனைச்சாவடியில் N.P.HY.6316 இலக்கமுடைய புத்தகம், தற்காலிக புத்தகம், வரி அட்டை அடங்கிய பார்சலை யாராவது தவறுதலாக எடுத்துச்சென்றிருந்தால் தயவு செய்து ஈழநாதம் யாழ். பணிமனை அல்லது கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைப்பவர்க்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். தகவல்:- விவேகானந்திராசா துசியந்தன், 22 இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். T.P.0777286061. (5382)

### SPOKEN ENGLISH

A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு அடிப்படை இலக்கணத்துடன் பயிற்சி ஆரம்பம:04.07.2005 மாலை 5.மணி இடம்: அன்னை வேளாங்கன்னி ஆலயம் முன்பாக உதயநகர் கிழக்கு. ஆசிரியர் க.யோகன் (BBA&NDE) (6288)


## நுளம்பு வலைகள் வழங்கல்

(மல்லாவி)

துணுக்காய் பிரதேசத்தில் சர்வோதயநிதியுதவியுடன் 12 கிராமங்களில் 2131க்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு நுளம்பு வலைகள் வழங்கப்பட்டுள்ளன. இந் நூளம்பு வலைகள் பாண்டியன்குளம் துணுக்காய் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் கிராமங்களுக்கு வழங்கவும் உள்ளனர். (24)

## சமகால அரசியல் நிலவரம் தொடர்பாக அம்பாள் புரத்தில் கலந்துரையாடல்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாண்டியன்குளம் பிரதேச அம்பாள் புரம் கிராமத்தில் நன்னீர் மீனவர் சங்கஉறுப்பினருக்கான சமகால அரசியல் நிலவரம் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது.

அம்பாள்புரம் பொதுநோக்கு மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை மு.ப.10.30 மணிக்கு அம்பாள்புரம் அரசியல்துறை பொறுப்பாளர் ம.செந்தூரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சிறப்புரையை தமிழீழ அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து கருத்துரைகளை துணுக்காய் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.புனிதன், பாண்டியன்குளம் துணுக்காய் பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பொறுப்பாளர் ம. இன்பபாவலன் ஆகியோர் வழங்கினர். இந் நிகழ்வில் 125 இற்கும் மேற்பட்ட நன்னீர் மீனவர் சங்கத்தின் உறுப்பினர்கள்கலந்து கொண்டனர். (24)

## கால்நடைகளுக்கு தடுப்பூசி ஏற்றும் திட்டம் பாண்டிய குளத்தில் ஆரம்பம்

(மல்லாவி)

கால்நடைகளுக்கு வருடாந்த தடுப்பூசி ஏற்றும் திட்டமானது இம்முறை உரிய காலத்தில் பாண்டியன்குளம் துணுக்காய் பகுதியில் ஆரம்பிக்கப்படடுள்ளது.

இதற்கு முல்லைத்தீவு அரசாங்க அதிபர் அவர்களால் வழங்கப்பட்ட குளிரூட்டி மற்றும் உலக உணவு விவசாய ஸ்தாபனத்தால் வழங்கப்பட்ட குளிரூட்டிகள் மிகவும் உதவியாக இருந்து வருகின்றது.

இந்த நிலையில் மக் ள் தமது மாடுகள், எருமைகளுக்கு டுப்புமருந்துகளை தவறாது பெற்றுக் கொள்ள தங்கள் பகுதி அமைப்புக்கள் மூலம் விரைவில் அணுகி சிறந்த பலனைப் பெறும் வண்ணம் கால்நடை வைத்தியர்கேட்டுள்ளார். (24)



பொதுக்கட்டமைப்பு தொடர்பாக விளக்கமளித்து அஸ்கிரிய பீடாதிபதியின் சம்மதம் பெற சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சென்றவேளை அஸ்கிரிய பீடாதிபதி உடுகம புத்தரகித்த தேரருக்கு அன்பளிப்பாக வழங்க இன்ரகூலர் சொகுசுவாகனமொன்றை எடுத்துச் சென்றிருந்ததாக "திவயின" சிங்களப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்தவாகனத்தை பீடாதிபதியிடம் கையளித்த சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொதுக்கட்டமைப்பு ஆவணத்திற்குச் சம்மதம் பெற்றதுடன் ஆசியையும் பெற்றுள்ளதாக அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.



பூநகரி - வாடியடியில் புதிதாக அமைக்கப்பட்ட கமநல சேவைகள் நிலை மாநாட்டு மண்டபத்தை கடந்த வியாழக்கிழமை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் நாடவை வெட்டித் திறந்து வைக்கின்றார். (34)

## வளர்பிறை இன்றுவெளிவருகிறது

(அலுவலகசெய்தியாளர்)

அன்னை இல்லம் உளவளத்துணை உளவியல் அறிவூட்டும் நிறுவனத்தின் சஞ்சிகையான "வளர்பிறை" இம்முறை சுனாமிச் சிறப்பிதழாக வெளிவருகின்றது.

இவ் அறிமுகவிழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு கிளிநொச்சி அன்னை இல்லம் உளவளத்துணை பணிமனையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் நிர்வாகக் குழுவினர் வேண்டியுள்ளனர். (சோ)

## மல்லாவி மருத்துவமனைக்கு 42 படுக்கை விரிப்புக்கள் வழங்கல்

(மல்லாவி)

மல்லாவி மருத்துவமனைக்கு சர்வோதய நிதியுதவியுடன் 42 படுக்கை விரிப்புக்கள் துணுக்காய் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் கடந்த வியாழக்கிமை வழங்கப்பட்டுள்ளது. மல்லாவி மருத்துவமனை வைத்திய அதிகாரியிடம் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர், பா.யுகனால் படுக்கை விரிப்புக்கள் வழங்கப்பட்டன. (24)

## குன்றும் குழியுமாகவுள்ள பள்ளிக்குடாவீதி

(பூநகரி)

பூநகரி மன்னார் வீதியிலிருந்து பள்ளிக்குடாவுக்குச் செல்லும் 3.5 கி.மீற்றர் தூரமான வீதி குன்றும் குழியுமாக காணப்படுகின்றது.

மீனவர்கள், பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பள்ளிக்குடா மக்கள் நாளாந்தம் பாவிக்கும் இந்த வீதி குன்றும் குழியுமாக இருப்பதால் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர். (34)


# DANISH REFUGEE COUNCIL (DRC)

DRC works at promoting lasting solutions to the problems of refugees and internally displaced persons throughout the world. In Sri Lanka, DRC supports reintegration of returnedA persons in the North and East and capacity building of local partner organizations. DRC's head office is located in Vavuniya, with district offices in Trincomalee and Kilinochchi.

## Vacancies

## Protection Officer – Kilinochchi/Mullaitivu

The Protection Officer will lead a team of Field Officers and be responsible for the co-ordination of DRC's protection activities in Kilinochchi and Mullaitivu. S/he will be responsible for developing and implementing DRC's protection training and awareness raising programmes in the two districts under the guidance of the Protection Advisor.

**Qualifications:**

- University degree ideally in Law, Politics or Social studies and at least 03 years relevant experience.
- Supervision skills.
- Excellent communication /negotiation skills.
- Advocacy skills.
- Good report writing ability.
- Computer literate particularly in MS Office and spreadsheets.
- Confidence and ability to liaise at all levels.
- Ability to communicate effectively in English and Tamil.
- Flexibility, enthusiasm and a creative approach.

Please forward your curriculum vitae along with names of two non-related referees to the following address within 07 days of this advertisement.

Head – Finance & Administration
Danish Refugee Council
No. 77, 1st Floor
1st Cross Street.
Vavuniya.

Fax No: 024 – 2224009
E mail: drc-hfa@sltnet.lk

(சி-12235)



## நாற்பத்தைந்தாம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 14.04.1947

வின்ணில் 11.05.2005





## திருமதி. இராஜலட்சுமி சந்திரபாலன்

(இளைப்பாறிய உ.க.ப தமிழ்) முல்லை வலயம்

முல்லை மண் தந்த முத்தமிழ் வித்தகியே!
எல்லையறு கல்விப்பணியாற்றி நின்ற உத்தமியே!
தொல்லையுறு மிவ் வாழ்வு போதுமென நினைந்து
தில்லைச்சிவன் தாளினை சேர்ந்தனையோ!

கூடிநாம் செயற்படுத்திய செயலமர்வுகளும்
தேடிநல்லறிவு பெற்ற பயிற்சிப்பட்டறைகளும்
நாடிநாம் நடத்திவைத்த மொழித்திறன் போட்டிகளும்
வாடிடாமலர்களாய் நீங்காதெம்நெஞ்சினில் நிலைத்தனவே!
ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!

வலயக்கல்விப்பணிப்பாளர்,
பணிமனை உத்தியோகத்தர்கள்
கிளிநொச்சிக் கல்வி வலயம்.

(சி-12236)

யாழ்ப்பாணம்

# ஈராக்கில் நிலைமை கைமீறிப் போய்விடவில்லை

# அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் சொல்கிறார்



பாக்தாத்தின் கறடா மாவட்டத்தில் குண்டு வெடிப்பால் சேதமடைந்த புனிதத் தலத்தின் வெளியே வீதியில் நின்று தொழுகையில் ஈடுபடும் ஷியா முஸ்லிம்கள்.

(வோஷிங்டன்)

**ஈராக்கில்நிலைமை கை மீறிப் போய் விட்டது என்பது சரியல்ல. அமெரிக்கப் படைகளை அங்கிருந்து திரும்பப் பெற்றால் நிலைமை மோசமாகிவிடும். அதனால் படைகளை வாபஸ் பெற காலக்கெடு நிர்ணயிக்க முடியாது என அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் ரம்ஸ்பீல்ட் தெரிவித்துள்ளார்.**

வோஷிங்டனில் செனட் மற்றும் உள்நாட்டு ஆயுத சேவை குழு முன் பேசிய அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் கூறுகையில், ஈராக்கில் சாதகமான சூழ் நிலை நிலவுவதாக அந் நாட்டு அரசு தெரிவிக்கின்றது. ஈராக்கில் அரசு நிர்வாகத்தை எதிர்த்து கலகம் செய்ய யாரும் துணியவில்லை. அமெரிக்கப் படைகளை அங்கிருந்து திரும்பப் பெற்றால் நிலைமை மேலும் மோசமடையலாம். தீவிரவாதிகளின் ஊடுருவல் அதிகரிக்கலாம் எனவே படைகளை திரும்பப் பெற காலக்கெடு நிர்ணயிக்க முடியாது என்றார்.

அமெரிக்கப் பாராளுமன்றத்தில் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் கூறுகையில்; "ஈராக்கில் தற்போது நிலவும் சூழ் நிலை மிகவும் வேதனையளிக்கின்றது. மோசமான சூழ்நிலை நிலவுவதாக தெரிகிறது. அமெரிக்கப் படைகளை அங்கிருந்து திரும்ப அழைக்க வேண்டும். அதற்கான காலக்கெடு நிர்ணயம் செய்ய வேண்டும்" என்றார்.

ஜனநாயகக் கட்சி செனட் கமிட்டியின் உயர் மட்டக் குழு உறுப்பினர் கார்ல் லெவின் கூறுகையில்: ஈராக் மக்கள் முன்னேற்றத்தில் அதிபர் புஷ் நிர்வாகம் அதிக ஈடுபாடு காட்ட வேண்டும். ஈராக் மக்களை அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் தன்னிறைவு அடையச் செய்ய வேண்டும். அமெரிக்க இராணுவம் அங்கிருக்கும் பொழுதே இதைச் செய்ய வேண்டும் என்றார்.

தெற்கு கரோலினா மாகாணத்தைச் சேர்ந்த குடியரசுக் கட்சி உறுப்பினர் லிண்ட்சே கிரஹாம் கூறுகையில்; ஈராக் பிரச்சினைக்கு குறைந்து வரும் ஆதரவு அச்சத்தை ஏற்படுத்துகின்றது. கடந்த ஆண்டு கிடைத்த ஆதரவு தற்போது குறைந்து விட்டது. ஈராக்கில் சுமூகமான சூழ் நிலை ஏற்படுத்துவதற்கு முன்பு அவசரப்பட்டு நாம் அங்கிருந்து படைகளை வாபஸ் பெறும் கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டு விடுவோமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. அவ்வாறு படைகளை நாம் வாபஸ் பெற்றால் மக்களின் நம்பிக்கையை இழந்து விடுவோம். இப்பொழுது மக்கள் கேள்வி கேட்கத் தொடங்கி விட்டனர். அரசின்மீது மக்களின் மனதில் புள்ளி விழத் தொடங்கி விட்டது என்றார்.



ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த செனட்டர் கென் னடி கூறுகையில் "ஈராக் விடயத்தில் நாம் பெரும் தவறு செய்து விட்டோம்" அதற்கு பொறுப்பேற்று இராணுவ அமைச்சர் ரம்ஸ்பீல்ட் பதவி விலக வேண்டுமா? இல்லையா என்றார்.

ஈராக்கில் அடிக்கடி நடந்து வரும் அதிரடித் தாக்குதல்களால் அங்கு இறப்பு எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. ஈராக் கொள்கையில் வெள்ளை மாளிகை தோல்வியைத் தழுவி விட்டது. ஈராக்கின் உண்மை நிலை என்ன என்பது கண்டறியப்படவில்லை. ஈராக் மக்கள் கிளர்ச்சியில் ஈடுபடுவதற்கு முன்பு அமெரிக்க இராணுவத்தை அங்கிருந்து திரும்பப் பெறச் செய்ய வேண்டும். என செனட் சபை உறுப்பினர்களில் பலர் வலியுறுத்தினர்.

இதேவேளை அமெரிக்க அதிபர் புஷ் வரும் செவ்வாய் கிழமை யன்று இது குறித்து மக்களிடையே உரை நிகழ்த்தவுள்ளார்.

## ஈரான் அதிபர் தேர்தல் முகமது அமதீனி வெற்றி

(தெஹ்ரான்)

ஈரான் அதிபர் தேர்தலில் யாருக்கும் வெற்றி கிடைக்காத நிலையில் நேற்று முன் தினம் நடந்த இரண்டாவது சுற்றுத் தேர்தலின் வாக்கு எண்ணிக்கையில் தெஹ்ரான் பழமைவாத முன்னாள் மேயர் முகமது அமதீனி வெற்றி பெற்றுள்ளார்.

இவர் 61.8 சதவீதவாக்குகள் பெற்றார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட மிதவாதமதத் தலைவர் அக்பர் ஹசமி ரப்சஞ்சானி 35.7 சதவீத வாக்குகள் பெற்றார். ஈரான் தேர்தலில் 50 சதவீத வாக்குகள் பெறும் வேட்பாளரே பதவியேற்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.



தெற்கு பாக்தாத்தில் அமெரிக்கப் படையினர் ஒருவர் துருப்புக்காவியில் காவற்கடமையில் ஈடுபட்டுள்ளார்.

## உலகளாவிய ரீதியில் நாறும் அமெரிக்காவுக்கு இந்தியாவில் மட்டும் ஆதரவு அலையாம்!

(வோஷிங்டன்)

ஈராக்போர் உட்பட பல்வேறு விவகாரங்களில் அமெரிக்காவின் பெயர் உலகளவில் நாறிக் கொண்டிருந்தாலும், இந்தியாவில் அதற்கு ஆதரவு இருக்கிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

உலகளவில் எல்லாப் பிரச்சினைகளிலும் அமெரிக்கா தலையிட்டு கட்டப்பஞ்சாயத்து செய்கிறது. அமெரிக்காவின் இந்தப் போக்கால், பெரும்பான்மை நாடுகளில் அதற்கு எதிராக எதிர்ப்பு அலை வீசுகிறது. ஈராக்போருக்குப் பின் முஸ்லிம் நாடுகளில் அமெரிக்காவுக்கு எதிரான எதிர்ப்பு அலை மேலும் அதிகரித்துள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த ஆய்வு மையம், கடந்த ஏப்ரல் 20ஆம் திகதி முதல் மே 31ஆம் திகதி வரை சர்வதேச அளவில் கருத்துக்கணிப்புநடத்தியது. இந்தியா, பாகிஸ்தான், இந்தோனேஷியா, கனடா ஜோர்டான் உட்பட 15 நாடுகளைச் சேர்ந்த 17 ஆயிரம் பேர் இதில் பங்கேற்றனர். தீவிரவாதத்துக்கு எதிராக உலகளவில் அமெரிக்கா எடுக்கும் நடவடிக்கை ஈராக் மீதான போர் வெளியுறவு கொள்கை, குவான்டனாமோ சிறையில் கைதிகளுக்கு செய்யப்படும் கொடுமை உட்பட பல்வேறு விவகாரங்களால் அமெரிக்காவின் பெயர் எந்தளவுக்கு நாறிக் கொண்டிருக்கிறது என்பதை தெரிந்து கொள்வதே இந்த கருத்து கணிப்பின்நோக்கம்.

இதில் இந்தியாவில் எடுக்கப்பட்டகருத்துக் கணிப்பு முடிவு அமெரிக்காவுக்கு ஆதரவாக இருக்கின்றது. ஜோர்டானில் அமெரிக்காவுக்கு எதிராக உச்சக்கட்ட எதிர்ப்பு அலை வீசுகின்றது கனடாவும் இந்த பட்டியலில் உள்ளது ஈராக் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியதற்குமற்ற நாடுகளைவிட இந்தியாவில் 45 சதவீதம் ஆதரவு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த போரின் மூலம் உலகம் பாதுகாப்பான இடமாக மாற்றப்பட்டுள்ளதாக கருத்துக் கணிப்பில் கூறப்பட்டுள்ளது.

அமெரிக்கர்கள் மீது இந்தியர்கள் அபரிமிதமான மதிப்பும், மரியாதையும் வைத்துள்ளனர் என்பதையும் கருத்துக்கணிப்பு கூறுகின்றது. அமெரிக்கர்கள்கடின உழைப்பாளிகள் என்று81 சதவீதம் பேரும், நேர்மையானவர்கள் என்று 58 சதவீதம் பேரும் தெரிவித்துள்ளனர்.

## இணையத் தளங்களை மூட சீனா முடிவு

(பீஜிங்)

முறையாக பதிவு செய்யாத இணையத் தளங்களுக்கு சீன அரசு ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரை கெடு கொடுத்துள்ளது. அதற்குள் பதிவுசெய்யாவிட்டால் அந்த இணையத் தளங்களை மூடுவதற்கு அரசு முடிவு செய்துள்ளது.

## உலக மக்கள் தொகை 650 கோடியைத் தாண்டுகின்றது

*கணக்கெடுப்பில் தெரிவிப்பு*

(பாரீஸ்)

பிரான்ஸ் நிறுவனம் ஒன்றுஉலக மக்கள்தொகை பிறப்பு 650 கோடியைத் தாண்டுவதாகத் தெரிவித்துள்ளது.


அந்த நிறுவன அறிக்கையில் இப்போது உலக தொகை 650 கோடியைத் தாண்டுகிறது. இதில் பாதிக்கு மேற்பட்டவர்கள் ஆறு நாடுகளில் வசிக்கின்றார்கள். இப்போது உள்ள உலக மக்கள் தொகை 600கோடியே 477இலட்சம், டிசம்பர் மாதம் 650 கோடியைத் தாண்டி விடும்.

ஒவ்வொரு 100பேர்களில் 61பேர் ஆசிய நாடுகளில் உள்ளனர். 14 பேர் ஆபிரிக்க நாடுகளில் உள்ளனர். 11பேர் ஐரோப்பிய நாடுகளிலும் ஒன்பது பேர் லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் ஐந்து பேர் வட அமெரிக்காவிலும் வசிக்கின்றார்கள்.

புதிதாக பிறக்கும் 100 குழந்தைகளில் 57 குழந்தைகள் ஆசிய நாடுகளில் பிறக்கின்றன. 26 குழந்தைகள் ஆபிரிக்காவிலும் ஒன்பது குழந்தைகள் லத்தீன் அமெரிக்காவிலும் பிறக்கின்றன. 100 குழந்தைகளில் ஐந்து குழந்தைகள் ஐரோப்பாவிலும் மூன்று குழந்தைகள் வட அமெரிக்காவிலும் பிறக்கின்றன.

## ஜப்பானில் அதிவேக ரயில் அறிமுகம்

(டோக்கியோ)



அதிவேகத்தில் செல்லும் புல்லெட் ரயில்களை ஜப்பான் அறி முகப்படுத்தியுள்ளது. அதிவே புல்லெட் ரயில்கள் ஏற்கனவே ஜப்பான், பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளில் ஓடுகிறது. மேற்கு ஜப்பானிலுள்ள சான்யோ ஷிங்கச்சன் நிறுவனம், பிரான்சில் உள்ள டி.ஜி.வி நிறுவனம் லண்டனையும் புரூ செல்சையும் இணைக்கும் வகையில் ரோல்பர் நிறுவனம் அதிவேக ரயில்களை அறிமுகப்படுத்தியுள்ளன. இந்த ரயில்கள் மணிக்கு 300 கி.மீ வேகத்தில் ஓடுகின்றன.

ஆனால் இவற்றையெல்லாம் மிஞ்சும் வகையில் இன்னும் அதி வேகத்தில் செல்லும் புல்லெட் ரயில்களை கிழக்கு ஜப்பானில் இப்போது அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள். சிங்கன்சர் நிறுவனம் இதை அறிமுகப்படுத்தியிருக்கின்றது. ஜப்பானின் சென்டாய் காமிகிதா நகரங்களுக்கு இடையே நேற்று முதல் இந்த அதிவேக ரயில் ஓடுகின்றது.

இந்த ரயில் மணிக்கு 40 கீ.மீ. வேகத்தில் செல்லும் திறன் உள்ளது. ஆனாலும் மணிக்கு 36.கி.மீ வேகத்தில் செல்லவே இது அனுமதிக்கப்பட்டுள்ளது. சோதனை ஓட்டத்திலும் 360 கி.மீ வேகத்தில் பரீட்சிக்கப்பட்டது.



மேற்குக் கரைக்கு அண்மையாகவுள்ள அற்ரெயில் கிராமத்தில் ஒரு இராணுவ நடவடிக்கையின் போது இஸ்ரேலியப் படையினர் நிலையெடுத்துள்ளனர்.

## இந்தோனேசியாவில் நில நடுக்கம்

இந்தோனேசியாவில் நேற்று இந்திய நேரப்படி அதிகாலை 3.15 மணியளவில் லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது .இது ரிச்ரர் அளவு கோலில் 5.1 எனப் பதிவாகியது.

கடந்த வருடம் டிசம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி பேரலை அனர்த்தத்தைத் தொடர்ந்து இந்தோனேசியாவில் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# இரணைமடு நீர்த்தேக்கத்தின் கீழ் ஏற்று நீர்ப்பாசனத் திட்டம்

## ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுப்பு

(கிளிநொச்சி)

**நியாப் திட்டத்தின் ஊடாக இரணைமடு நீர்த்தேக்கத்தின் கீழ் திருவையாறு பிரதேசத்திற்கு ஏற்று நீர்ப்பாசன திட்டமொன்றை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.**

திருவையாறு ஒன்று, இரண்டு, மூன்றாம் பகுதிகளிற்கும், மகளிர் திட்டத்திற்கும் ஏற்று நீர்ப்பாசனம் வழங்குவதற்கான கருத்துக்களை அறிவதற்கான பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

திருவையாறு முதலாம் பகுதிக்கான பதிவுகள் எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 10 மணிக்கு திருவையாறு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதேவேளை இரண்டாம் பகுதிக்கான பதிவுகள் எதிர்வரும் 28,29 ஆகிய நாட்களில் காலை 10 மணிக்கும் திருவையாறு மகளிர் திட்டத்திற்கான பதிவுகள் எதிர் வரும் 29 ஆம்திகதி காலை 10 மணிக்கும் திருவையாறு மூன்றாம் பகுதிக்கான பதிவுகள் எதிர்வரும் 30 திகதி காலை 10 மணிக்கும் திருவையாறு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்பதிவுகளை மேற்கொள்பவர்கள் காணி விஸ்தீரணம், கிணறு, வீட்டுடன் கூடிய வான்பயிர்கள் பற்றிய விபரங்களை வழங்குவதோடு அவ்வாறு பதிவுகளை மேற்கொள்ளாதோருக்கு ஏற்று நீர்ப்பாசனம் வழங்குவதற்கு கவனம் செலுத்தப்படாது என்றும் திருவையாறு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

மேற்படி நிகழ்வில் நியாப் திட்ட பிரதிப் பணிப்பாளர் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேசமயம் இரணைமடு நீர்த்தேக்கத்தின் கீழ் கடந்த பல வருடங்களுக்கு முன் ஏற்று நீர்ப்பாசன திட்டம் மூலம் விவசாய நடவடிக்கைகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வந்ததோடு, இவை சிறிலங்கா அரசின் நடவடிக்கைகள் காரணமாக முற்றாகக் கைவிடப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (15)

## வீதிக்கு குறுக்காக வீழ்ந்துள்ள மரத்தை உடன் அகற்றுக!

(கிளிநொச்சி)

திருவையாறு 1ஆம் பகுதி பிரதான வீதியில் நீண்டநாட்களாக பாரிய பாலை மரமொன்று வீதிக்குக் குறுக்காக முறிந்து வீழ்ந்து கிடக்கிறது.இது இதுவரை அகற்றப்படவில்லை. இதனால் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.இம்மரத்தினை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்டோர் வேண்டப்படுகின்றனர். (15)

## கரும்புலிகள் தினத்தை சிறப்பிக்க நடவடிக்கை

(உடையார்கட்டு)

உடையார் கட்டுப் பிரதேசத்தில் கரும்புலிகள் தினத்தை சிறப்பாக செய்வதற்கான முன்னோடி ஏற்பாடுகளை பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினரும், பிரதேச அரசியல்துறையினரும் இணைந்து மேற்கொண்டுள்ளனர்.

எதிர்வரும் கரும்புலிகள் தினத்தை மூங்கிலாறு மட்டு-அம்பாறை மாவீரர் மண்டபத்தில் எழுச்சிகரமான முறையில் கொண்டாட திட்டமிடப்பட்டுள்ளது.

கலைநிகழ்வுகள், கருத்துரைகள் என்பனவும் இடம் பெறவுள்ளதாக பிரதேச அரசியல்பொறுப்பாளர் புகழரசன் தெரிவித்துள்ளார். (19)

## பால்நிலை சமத்துவம் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது

(மன்னார்)

மன்னார் பிரதேச செயலகத்தில் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தினரால் ஒக்ஸ்பாம் நிறுவன அனுசரணையுடன் பால்நிலை சமத்துவம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கடந்த வியாழனன்று பிரதேச செயலாளர் ஸ்ரானிடிமெல் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் மன்னார் பிரதேசத்திற்குட்பட்ட சகல கிராம உத்தியோகத்தர்களும் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் ஊக்குவிப்பாளர்களும் கலந்து கொண்டனர். (18)

## வைத்தியர் இன்மையால் செயற்படாதுள்ள மருந்தகத்தை இயங்க வைக்க நடவடிக்கை

(முல்லை)

செம்மலையில் வைத்தியர் இன்மையால் செயற்படாதுள்ள மத்திய மருந்தகத்தை இயங்க வைக்க தமிழீழ சுகாதார சேவையினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

நீர்ப்திட்டத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டுள்ள மத்திய மருந்தகம் வைத்தியர் இல்லாமையினால் இதுவரை திறக்கப்படவில்லையென முல்லை. மாவட்டபிரதிமாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் து.வி.ஜெயகுலராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; நாயாறு, செம்மலை, குமுழமுனை, அளம்பில் ஆகிய மக்களுக்கு பலனளிக்கக்கூடிய இம்மருந்தகம் முல்லை. மாவட்டத்தில் பல வைத்தியர்கள் இருந்தும் எவரும் இங்கு கடமையாற்ற முன்வராத தினால் இந்நிலை உள்ளதாகவும் எனவே தமிழீழ சுகாதார சேவையினருடன் இது தொடர்பாக கதைத்து அதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்துவருவதாகவும் தெரிவித்துள்ளார். (20)

## குளிக்கச்சென்ற இளைஞர் நீரில் மூழ்கி மரணம்!

முல்லை. உடையார்கட்டு குளத்தில் குளிக்கச்சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி மரணமடைந்தார் .

நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.00 மணியளவில் தனது நண்பர்களுடன் குளத்தில் குளித்துக் கொண்டிருந்த இவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார். காராளசிங்கம் சசிரேந்தன் (வயது-20)எனும் மேற்படி இளைஞர் உடையார்கட்டு தெற்கை வசிப்பிட மாகக்கொண்டவர் எனத் தெரியவந்துள்ளது.

உடையார்கட்டு மகா வித்தியாலயத்தில் வர்த்தகப்பிரிவில் கல்வி கற்கும் இவர் நேற்றுமுடிவுற்ற கல்விப்பொதுத்தராதர உயர்தரத் தேர்வை எழுதிக்கொண்டிருந்தார். இது தொடர்பான விசாரணைகளை விசுவமடு தமிழீழ காவல்துறையினர் மேற்கொண்டுவருகின்றனர்.



பொதுக்கட்டமைப்பிற்கு ஆதரவு தெரிவித்தும்.அதற்கு எதிரான சக்திகள் சமாதானத்திற்கு எதிரான சக்திகள் எனத் தெரிவித்தும் திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவு கன்னியா, மாங்காய்யூற்று, பீலியடி ஆகிய கிராமத்து மக்கள் ஒன்று சேர்ந்து கன்னியா பிள்ளையார் ஆலயத்தின் முன்னால் நேற்று முன்தினம் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்

## மன்னார் கல்விச்சமூகத்தினருக்கு சமகால அரசியல் விழிப்புணர்வூட்டல்

மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் சமகால அரசியல் விழிப்புணர்வுக்கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. மன்னார் மாவட்டத்தின் மடு, மன்னார் கல்வி வலயங்களில் கோட்ட ரீதியாக கல்விச் சமூகத்தை ஒன்றிணைத்து.

.இன்றைய அரசியல் நிலை தொடர்பாகவும்கல்விச் சமூகம் ஆற்ற வேண்டிய பங்கு தொடர்பாகவும் ஆசிரியர்கள், உயர்வகுப்பு மாணவர்கள், திணைக்கள அலுவலர்கள் விழிப்படையக்கூடிய வகையில் இக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மாந்தை மேற்கு கோட்ட அதிபர், ஆசிரியர்களுக்கான கருத்தமர்வு நேற்று முன்தினம் மன்/ ஆண்டாங்குளம் றோ.க.த.க. பாடசாலை ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது. முன்னதாக தமிழீழ தேசியக் கொடியை மன்னார் மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் ந.ஒளிவளவன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து மடு கல்விப்பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற கருத்துரையில் முதன்மை உரையை மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இனியவன் ஆற்றினார். சிறப்புரையை தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் பூவண்ணன் நிகழ்த்தினார். நிகழ்வில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

## பொதுநோக்கு மண்டபம், முன்பள்ளி திறந்து வைப்பு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி இடைத்தங்கல் முகாம்களுக்கு ஏ.எஸ்.பி.நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட பொது நோக்கு மண்டபம், முன்பள்ளி என்பன திறந்து வைத்து மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

கடந்த வியாழனன்று மதியம் 12..30 மணியளவில் கி.சாந்தகுமார் ஆசிரியர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மங்கலவிளக்கினை முகாம் குழுத்தலைவர் தாரணன் அவர்களும் ஏ.எஸ்.பி நிறுவன பிரதிநிதிகளும் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியினை வடமராட்சி கிழக்கு செயலணிக் குழு பொறுப்பாளர் யாழ் அமுதன் ஏற்றி வைத்தார்.

பொது நோக்கு மண்டபத்தினை ஏ.எஸ்.பி நிறுவன இணைப்பாளர் ஜேம்ஸ் மாட்டீன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். முன்பள்ளியினை ஏ.எஸ்.பி.பிரதிநிதி நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். சிறப்புரையினை வே.விக்கினேஸ்வரன் ஆற்றினார். (தீ)

## அமரர் மகேந்திரவரதன் அறிவாலயம், அஞ்சனா முன்பள்ளி திறந்துவைப்பு

(அலுவலக செய்தியாளர்)

மகேந்திரவரதன் அறிவாலயம், அஞ்சனா முன்பள்ளி புதிய கட்டடத் திறப்புவிழா எதிர்வரும் நான்காம் திகதி கட்சன் வீதி, வட்டக்கச்சியில் இடம் பெறவுள்ளது.

அமரர் பரஞ்சோதி அவர்களின் ஞாபகார்த்தமாக அவரது சகோதரன் கலியுகவரதன் அவர்களின் நிதியுதவியுடன் கிளி/கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் புதிதாக அமைக்கப்பெற்ற மகேந்திரவரதன் அறிவாலயம் மற்றும் மாவீரர் அஞ்சனாவின் பெயரிலான முன்பள்ளி ஆகியன உள்ளடங்கிய கட்டடத் தொகுதி அன்றையதினம் காலை 10.00 மணிக்கு திறந்து வைக்கப்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)


## தாயகம் திரும்பிய மக்களுக்கு உதவி

இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பி வட்டக்கச்சிப் பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தியாவில் இருந்து 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2005 ஆம் ஆண்டு வரைக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் வருகை தந்தவர்களுக்கு கிளி.கிழக்கு புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் ஐ,ஓ,எம், நிறுவனத்தினரால் வருமான அதிகரிப்புத்திட்டத்தின் கீழ் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு வருகின்றனர். இதன் அடிப்படையில் முதற் தடவையாக ஏழு பயனாளிகளுக்கு தலா 33000 (முப்பத்து மூவாயிரம்) ரூபாய் வழங்கப்பட்டது. மற்றும் ஐந்து பயனாளிகளுக்கு மலசலகூடமும் கட்டப்பட்டு வருகின்றது. அடுத்த தடவையாக ஏனைய மக்களுக்கும் உதவிகள் வழங்க ஏற்பாடுகள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (12)

## இன்று மருத்துவசேவை

நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினால் வட்டக்கச்சி பிரதேச மக்களுக்கான மருத்துவசேவை ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கிளி/இராமநாதபுரம் மேற்கு அரசினர் வித்தியாலயத்தில் வெளிநாட்டு வைத்தியர்களைக் கொண்டு நடைபெறவுள்ளது. எனவே இப்பகுதி மக்கள் இந்த சுகாதார சேவையைப்பெற்று பயன்பெற்றுக்கொள்ளுமாறு நலவாழ்வு அபிவிருத்தி நிறுவன நிர்வாகப் பணிப்பாளர் க.திலகன் கேட்டுள்ளார்.



கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கென கிளிநொச்சி நலவாழ்வு மையத்தினால் ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியுடைய புரொஜெக்ர் (PROJECTOR) இயந்திரம் நேற்று முன்தினம் அன்பளிப்புச் செய்யப்பெற்றது. அன்பளிப்பு செய்யப்பெற்ற மேற்படி இயந்திரத்தினை படத்தில் காணலாம். (படம்:-சோதி)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதி புனரமைப்பு துரிதகதியில் மேற்கொள்ளப்பட வேண்டும்

## யாழ். அரசாங்க அதிபர் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

**சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இடம்பெறும் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகள் மிகவும் துரிதகதியில் நடத்தி முடிக்கப்படல் வேண்டும் என யாழ். அரசாங்க அதிபர் கே.கணேஸ் வலியுறுத்தியுள்ளார்.**

இதனைக் கவனத்திலெடுத்து யாழ். மாவட்டத்தில் புனர்வாழ்வுப் பணிகளில் ஈடுபடும் அரசசார்பற்ற நிறுவனங்கள் தமது பணிகளை காலக்கிரமத்தில் செய்து முடிக்க வேண்டும் என்றும் அரச அதிபர் கே.கணேஸ் மேலும் வலியுறுத்தியிருக்கிறார்.

சுனாமி தாக்கம் ஏற்பட்டு ஆறு மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மீளக் குடியமர்வு, கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, பொருளாதார மேம்பாடு இன்னமும் வழமைக்குத் திரும்பவில்லை இதனால் அங்கு பாதிக்கப்பட்ட மக்கள் பெரும் இன்னல்களை அனுபவிக்கின்றனர்.

இதைவிட மழைகாலம் நெருங்கி வருவதால் பாதிக்கப்பட்ட மக்களை நிரந்தர வீடுகளில் குடியமர்த்த வேண்டிய தேவை உள்ளது. இந்த விடயத்தில் சுகாதாரம், கல்வி, பொருளாதார நிலைமைகளையும் கவனத்தில் எடுப்பது அவசியம்.

எனவே இவற்றை கவனத்தில் கொண்டு இப்பகுதிகளில் புனர்வாழ்வுப் பணி செய்வோர் துரிதமாக தமது நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (33)

# கரும்புலிகள் நாளை உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்க தென்மராட்சி மக்கள் ஏற்பாடு

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் ஜீலை-5 கரும்புலிகளின் நினைவு தினத்தை உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்க விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது.

எமதுதேச விடுதலைப்போரில் எமது தாயக மண்ணுக்காய் உயிரையே அர்ப்பணித்த இப்புனிதர்களின் நினைவு தினத்தை அனுஷ்டிக்கும் பொருட்டு இப்பிரதேசத்தின் பல பகுதிகளில் மக்கள் அஞ்சலி செலுத்தும் வகையில் பந்தல்கள் அமைக்கப்பட்டு இம் மாவீரர்களுக்கு மக்கள் தமது அஞ்சலிகளை செலுத்துவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (28)

# செய்முறைப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் சாரத்தியப் பயிற்சி போதனாசிரியர்களுக்கான எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் செய்முறைப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களை உதவி ஆணையாளர் தொழில் நுட்பம் 533, 581, 341 எல்வித்திகல மாவத்தை கொழும்பு 5என்ற முகவரிக்கு 30.07.2005 இதற்குமுன் அனுப்பிவைக்கவும்.

# காணியற்றவர்களுக்கு அரச காணியை வழங்க யாழ்.அரச அதிபர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இருக்கும் அரசகாணிகளை காணி அற்றவர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். அரச செயலகம் அறிவித்துள்ளது.

அந்த அடிப்படையில் அரச காணிகளை இனம் கண்டு அவற்றை சட்டப்படி காணி அற்றவர்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக விசேட செயலணிக்குழு ஒன்றும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ தலைமையில் இயங்கிவருகின்றது.

யாழ்.அரச செயலகத்தை மையமாகக்கொண்டு இயங்கிவரும் இக்குழு யாழ். மாவட்டத்திலுள்ள அரசாங்கக்காணிகளை இனம் காணும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.

யாழ். மாவட்டத்தில் தற்பொழுது நிலவிவரும் காணியில்லாப் பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்காகவே இக்குழு நியமிக்கப் பட்டுள்ளது.

காணியற்றவர்களுக்கு இலவசமாகக் காணிகளை வழங்கி அவர்களின் குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்துவது இக்குழுவின் நோக்கமாகும். (33)

# அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க அபிவிருத்திக் குழுக்கள் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இடம் பெறும் உள்ளூர் அபிவிருத்தித் திட்டங்களை திருப்திகரமானதாக முன்னெடுப்பதற்காக உள்ளூர் அபிவிருத்திக் குழுக்கள் நியமிக்கப்படும் என்று உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வி.இராசையா தெரிவித்துள்ளார்.

இந்தக்குழுக்கள் யாழ். மாவட்டத்தில் இருக்கும் ஒவ்வொரு பிரதேசசபைகள், நகரசபைகள், மாநகரசபை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் என்று தெரிவித்துள்ள உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வி.இராசையா.

மேற்படி உள்ளூராட்சி சபைகளால் தத்தமது பிரதேசப்பரப்புகளில் மேற்கொள்ளப்படும் உள்ளூர் அபிவிருத்தி நடவடிக்கைகளை இக்குழு இனம்கண்டு, சிபார்சு செய்து அது குறித்த நடவடிக்கைகளை முன்னெடுக்கும் எனவும் தெரிவித்தார்.

உள்ளூர் சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளைக் கொண்டதாக அமையவுள்ள இக்குழு உள்ளூர் அபிவிருத்தித் திட்டங்களின் போது அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும் பாரபட்சமான நடவடிக்கைகளை தவிர்த்து முழுமையான பயனை அபிவிருத்திப்பணிகள் மூலம் மக்களை அனுபவிக்கச் செய்யும் நோக்கிலேயே இது அமைக்கப் படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (33)

# யாழ். இல் விவசாயிகளுக்கான தொழில்துறை மேம்பாட்டுப்பயிற்சி

(யாழ்ப்பாணம்)

நியாப் திட்டம் II இன் கீழ் யாழ். குடாநாட்டு விவசாயிகளுக்கான தொழில்துறை மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ். குடாநாட்டில் அமுல்செய்யப்பட்டுள்ள நியாப் II திட்டத்தின்கீழ் நடைமுறைப்படுத்தவிருக்கும் விவசாய மேம்பாட்டுத்திட்டத்தின் ஓர் அங்கமாகவே இப்பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.யாழ்ப்பாணம் விவசாயப்பயிற்சிக்கல்லூரியில் இதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

நியாப் II திட்டத்தின் கீழ் வழங்கப்படவுள்ள விவசாயமேம்பாட்டு உதவிகளை பயனாளிகள் எவ்வாறு கையாள வேண்டும்? என்பதைத் தெளிவுபடுத்தும் விதமாக இப்பயிற்சிகள் வழங்கப்பட்டன. (33)

# யாழ். மாவட்டத்தில் உலகவங்கியால் 2006இல் 4000வீடுகள் அமைக்கப்படும்

## உலகவங்கியின் வடக்கு கிழக்கு மாகாண வீடமைப்புத்திட்டப்பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின் நிதியுதவியுடன் 2006 ஆம் ஆண்டில் யாழ். மாவட்டத்தில் 4000வீடுகள் அமைக்கப்படவிருப்பதாக உலக வங்கியின் வடக்குக்கிழக்கு மாகாண வீடமைப்புத்திட்டப் பணிப்பாளர் செ.பத்மநாதன் தெரிவித்தார்.

இந்த வீடுகள் யாவும் கடந்த கால யுத்த நடவடிக்கைகளினால் வீடுகளை இழந்த அல்லது சேதமான வீடுகளை உடைய மக்களுக்கே அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன எனவும் தெரிவித்தார்.

இந்த வீடமைப்புத்திட்டத்திற்கான பயனாளிகள் தெரிவு இந்த வருடம் இறுதிப்பகுதியில் ஆரம்பமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்காக உலக வங்கி பல கோடிரூபாநிதியை ஒதுக்கியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (33)

– மூங்கிலாறு பிரதேசத்தில் –

# சமகால அரசியல் கருத்தரங்கும் தேசிய எழுச்சிப் பேரவை தெரிவும்

(உடையார்கட்டு)

உடையார்கட்டு மூங்கிலாறு பிரதேசத்தில் தேசிய எழுச்சிப் பேரவை தெரிவு, சமகால அரசியல் மற்றும் விழிப்புணர்வு கருத்தரங்குகள் என்பன கடந்த வாரம் இடம் பெற்றன.

மூங்கிலாறு மட்டு-அம்பாறை மாவீரர் மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது. பொது அமைப்பு குழுக்கள் வலுவானதாக இருக்க வேண்டியதன் அவசியத்தையும், சமகால அரசியல் கருத்துக்களையும் சமூக பொருளாதார வளர்ச்சி இணைப்பாளர் யூட், தமிழர் புனர்வாழ்வுக்கழக முல்லை. மாவட்ட பணிப்பாளர் மூர்த்தி ஆகியோர் வழங்கினர்.

வீதி விபத்துக்களை தடுப்பதற்கு போக்குவரத்து விதிமுறைகள் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியம் தொடர்பாகவும் காவல் துறை உறுப்பினரால் கருத்துரை வழங்கப்பட்டது.

அடுத்து மூங்கிலாறு பகுதிக்கான ஊரக தேசிய எழுச்சிப் பேரவைத் தெரிவு உடையார்கட்டு பிரதேச அரசியல்துறைப்பொறுப்பாளர் புகழரசன் தலைமையில் இடம் பெற்றது.

தெரிவில் செயலராக விவேகானந்தன், உப செயலராக தில்லை நாயகி, பொருளாளராக கங்காதரன் ஆகியோர் இடம்பெற நிர்வாக உறுப்பினர்களாக இரவீந்திரன், ஜெஸ்லின், முருகேசு, அந்தோனி சாமி, சுப்பு இலட்சுமி, ரஞ்சித் மதி, முருகேசு ,யோகநாதன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (19)

# சிங்கள ஊர்காவல் படையினர் மூவருக்கு யூலை 7ஆம் திகதிவரை விளக்கமறியல்

## தமிழீழ நீதி மன்று உத்தரவு

தமிழீழ காவல்துறையினரால் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் ஊர்காவல் படையினர் மூவரையும் நேற்று பட்டிப்பளை தமிழீழ நீதிமன்றில் ஆஜர்ப்படுத்திய போது அவர்களை எதிர்வரும் யூலை 7ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதியாளர் உத்தரவிட்டுள்ளார். இவர்கள் சார்பில் சட்டவாளர்களான மகிதரன், வானுதரன் ஆகியோர் ஆஜராகியிருந்தனர். குற்றவாளி களுக்கெதிராக மட்டு. அம்பாறை காவல்துறைப் பொறுப்பாளர் லோகநாதன் ஆஜராகியிருந்தார்.

தடுப்புக் காவலிலுள்ள மூன்று ஊர்காவல் படையினரையும் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமென காவல்துறைப் பொறுப்பாளர் லோகநாதன் நீதிபதியைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க எதிர்வரும் 7ஆம் திகதிவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இதன்போது இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அம்பாறை மாவட்ட பிரதிநிதிகளான புட்டி எரிக்சன், வின்சட் ஆகியோரும் ஊர்காவல் படையினரின் உறவினர்களும் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

- யாழ்.மாவட்டத்தில்-

# சுனாமியால் சேதமான வீதியை புனரமைக்க 11மில்.ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தினால் சேதமாகியுள்ள வீதிகளைப் புனரமைக்கவென 11மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் யாழ். மாவட்ட பிரதமபொறியியலாளர் சிறிநிவாசன் தெரிவித்துள்ளார்.

இந்த நிதியினை ஜப்பானிய அபிவிருத்தி வங்கி வழங்கியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். இந்நிதியினைப் பயன்படுத்தி காரைநகர் வலந்தலைச்சந்தி தொடக்கம் பொன்னாலை, கீரிமலை, பருத்தித்துறை வல்வெட்டித் துறை, மருதங்கேணி என சுனாமியால் பாதிக்கப்பட்ட யாழ். மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் சுமார் 150 கிலோமீற்றர் நீளமான கரையோரவீதிகள் புனரமைக்கப்படவுள்ளன எனத்தெரிவித்த வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் சிறிநிவாசன் இதற்கான முதற்கட்டவேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (33)

# மாந்தை மேற்குப்பிரதேசத்தில் சமகால அரசியல் கருத்தரங்கு

(மன்னார்)

மாந்தை மேற்கு பிரதேசத்திலுள்ள பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுக்கான சமகால அரசியல் கருத்தரங்கு ஒன்று ஆண்டாங்குளம் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் இடம் பெற்றுள்ளது.

கடந்த வியாழக்கிழமை காலை 11மணியளவில் மடுவலையக் கல்விப் பணிப்பாளர் தெய்வேந்திரம் தலைமையில் இது இடம்பெற்றது. இந்நிகழ்வில் தேசியக்கொடியை மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் ஏற்றி வைத்தார்.இந் நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ். இனியவன், மாணவர் அமைப்புப் பொறுப்பாளர், தமிழீழ நிர்வாக சேவை பொறுப்பாளர் பூவண்ணன் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டு சமகால நிலைப்பாடு தொடர்பாக எடுத்து விளக்கியுள்ளனர். (18)


# சனாதிபதித் தேர்தலை நோக்கிய பலப் பரீட்சை தொடரும்

பொதுக்கட்டமைப்பு தொடர்பான ஒப்பந்தம். ஒருவாறாகக் கைச்சாத்தாகிவிட்டது. மனிதாபிமான நெருக்கடியொன்றில் சிக்கியுள்ள. பல்லாயிரக்கணக்கான மக்களின் மீள்வாழ் விற்காக அமைக்கப்படவுள்ள ஆலோசனைகளை வழங்கும் இவ் அமைப்பை பேரினவாதம் பெரும் பூதமாக வர்ணித்து அதற்கெதிராக ஆவேசம கொண்டு ஆடியதை கடந்த ஆறு மாதங்களாக சர்வதேசமும் பார்த்தது.

இந்த ஆட்டம் இத்துடன் முடிவடைந்து விடுவதற்கான அறிகுறி எதுவும் தெரியவில்லை. ஏனெனில் இதற்கெதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாகவும், மக்களை அணிதிரட்டப்போவதாகவும் , ஜே.வி.பி கூறுகின்றது. இதன் அங்கமாக முதலில் இந்தப் பொதுக்கட்டமைப்பினால் ஏற்படப் போகும் பின் விளைவுகள் குறித்து மக்கள் மத்தியில் பிரச்சார நடவடிக்கைகளை முன்னெடுக்கப் போவதாக அது அறிவித்திருக்கிறது.

இதற்குப் பின்னர் எவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கப்போகிறது? என்பது குறித்து இன்னமும் அது அறிவிக்கவில்லை.

அதேவேளை ஜாதிக ஹெல உறுமயவின் போராட்டங்களும் தொடரக்கூடும். அது சனாதிபதி சந்திரிகாவை வீட்டுக்கு அனுப்புவது வரை தொடரும் என இப்பொழுது அறிவிக்கப்பட்டிருக்கிறது.




அதாவது இவ் இருதரப்பும் பொதுக்கட்டமைப்புத் தொடர்பான எதிர்ப்புப் போராட்டங்களைக் கைவிடப்போவதில்லை, என்பது இதன் மூலம் வெளிப்படுகிறது.

ஆனால் இந்த பொதுக்கட்டமைப்பு தொடர்பாக ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளபோதும் அது எவ்வாறு நடைமுறைப்படுத்தப் போகிறது? என்பது குறித்து தமிழ்மக்கள் சந்தேகத்துடன்தான் இருக்கிறார்கள். ஏனெனில் கடந்தகால அனுபவம் மட்டுமல்ல கடந்த மூன்றாண்டு கால அனுபவமும் அவர்களுக்கு அதைத்தான் வெளிப்படுத்தியிருக்கிறது.

அத்துடன் இந்த ஒப்பந்தத்துக்கு கிடைத்த எதிர்ப்பும், தொடரும் எதிர்ப்பும் அவ்வாறான சந்தேகத்தை அதிகரிப்பதில் தவறேதும் இல்லை.

ஆனால் தென்னிலங்கையிலுள்ள அரசியல் கட்சிகள் அதாவது இந்த ஒப்பந்தத்தை செய்து கொண்ட ஒரு தரப்பான ஆளும் கட்சியாயினும் சரி, கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ள முக்கிய எதிர்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் சரி, ஒப்பந்தத்தை எதிர்த்துக் கொண்டு ஆட்சியிலிருந்து வெளியேறிச் சென்றுள்ள ஜே.வி.பி யும் சரி அவர்களுடன் போட்டி போடும் ஜாதிக ஹெல உறுமயவும் சரி இதனை அரசியலாக்கி சனாதிபதித் தேர்தல் நோக்கிய முனைப்புடன் செயற்படுகின்றன.



அதாவது அடுத்துவரும் சனாதிபதித் தேர்தலில் இதனை எவ்வாறு மூலதனமாக்கலாம் என்பது குறித்த போட்டியே இச்சிறிய விவகாரத்தைப் பெரும் பூதாகாரமாக்கி இத்தனை சிக்கலையும் ஏற்படுத்தியிருக்கிறது.

ஆளும் கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் கூட இந்தக் கட்டமைப்புக்கு எதிர்ப்பு இருக்கின்றது. ஆனால் எதிர்வரும் சனாதிபதித்தேர்தலில் இதனை ஓர் அரசியல் மூலதனமாக்க அது தவறப்போவதில்லை. குறிப்பாக ஆட்சியை இழக்கக் கூடிய அபாய நிலையிலும் கூட இந்தப் பொதுக் கட்டமைப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்தியமை ஒரு துணிச்சலான விடயம் என்ற அடிப்படையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி பிரச்சாரம் செய்ய முயலும்.

அதேவேளை வடக்கு கிழக்கு மக்களுக்கு அரசாங்கம் எதுவும் செய்யவில்லை என்ற பிச்சாரத்தை இத்துடன் முடிவுக்கு கொண்டு வந்து விடலாம் எனவும் அரசாங்கம் கூறிவருகிறது. ஆனால் வடக்கு கிழக்கு மக்களுக்கு தாம் எதுவும் செய்து விடவில்லை என்பது உண்மையே என அண்மையில் சந்திரிகா குமாரதுங்க ஒப்புக்கொண்டிருந்தார். ஆனால் வெறுமனே ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதும் இவ்வாறு ஒப்புக்கொள்வதும் மட்டும் எதனையாவது செய் ததாக அமைந்து விடாது ஏனெனில் வடக்கு கிழக்கு மக்களுக்கு பிரச்சினைகள் உண்டு என்று ஏற்றுக் கொண்ட முதலாவது தலைவி தானே, இனப்பிரச்சினைக் குத் தீர்வுகாண பேச்சு வார்த்தை களை ஆரம்பித்தவரும் தானே. நோர்வேயை மத்தியஸ்தராக கொண்டுவந்தவரும் தானே என சனாதிபதி சந்திரிகா இன்று வரை பெருமை பேசிவருகிறார்.

ஆனால் அவர் ஆட்சிப் பீடமேறி 11 வருடங்கள் ஆகியும் தமிழ்மக்களின் பிரச்சினைக்கு அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுகாண அவர் முயற்சி எதுவும் எடுக்கவில்லை. சமாதான முயற்சிகளைத் தொடங்கியதாக அவர் கூறிக்கொண்டாலும் அதனை அவர் யுத்தமாக மாற்றி தமிழ் மக்களைப் பெரும் துன்பத்துக்குள் தள்ளியது மட்டுமல்லாது அன்று மக்கள் வழங்கிய ஆணைக்குப் புறம்பாக நடந்துகொண்டு ஏனைய இனவாதசக்திகளை வளர்த்து விடுவதிலேயே அவர் பெரும் பங்காற்றினார்.

நோர்வேயை மத்தியஸ்தராக அழைத்த அவர் அந்நாட்டை இயன்றளவு மரியாதைக் குறைவாக நடத்தி வந்தார். இன்றும் சர்வதேச அழுத்தம் காரணமாகவே பொதுக்கட்டமைப் பொன்றை உருவாக்குவதற்கு உடன்பட்டிருக்கிறார். மனப்பூர்வமாக இந்த உடன்பாட்டைச் செய்து கொள்ளாத அதேவேளை இந்த உடன்பாட்டின்படி உருவாக்கப்படவுள்ள இந்தப் பொதுக்கட்டமைப்பை மிகத் தாழ்ந்த நிலைக்கு சிங்களமக்கள் மத்தியிலே தள்ளியுள்ளதுடன், சர்வதேச மத்தியிலே செயற்கரிய செயலொன்றைச் செய்து விட்டதாக காட்டவும் முயன்றிருக்கிறார்.


ஆனால் தமிழ்மக்கள், மிகவும் காலம்தாழ்த்திச் செய்துகொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தம் மூலம் உருவாக்கப்படும் அமைப்பானது பெரும் துன்பத்துக்குள் சிக்கியிருக்கும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்கள் அதிலிருந்து மீண்டு எழ உதவுமாயின் மிகவும் மகிழ்ச்சியடைவார்கள்.

எனினும் இதன் அமுலாக்கம் எவ்வாறு அமையப்போகிறது என்பதே அவர்களது கவலையாகும். அதேவேளை கடந்த மூன்று வருடங்களுக்கும் மேலாக கடைப் பிடிக்கப்பட்டுவரும் போர் நிறுத்த ஒப்பந்தம் அவர்களுக்கு இயல்பு வாழ்க்கையை வழங்கவில்லை.

அவர்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்து இராணுவ நெருக்குவாரமற்ற சூழலில் வாழ்ந்து விடவில்லை என்பது ஒரு புறம்.

ஒரு சில நிமிடங்களில் பேரழிவைச் சந்தித்த மக்களிற்கு நிவாரணம் கிடைப்பதற்கே இவ்வளவு இழுத்தடிப்புகளும், முட்டுக்கட்டைகளும் எனில் தமது உரிமைகளை இவர்களுடன் பேசிப்பெறுவது எவ்வாறு? என்பது மறுபுறம்.

இப்பொழுது இனவாதத்திற்குத் தலைமை தாங்க முற்பட்டிருக்கும் ஜே.வி.பி தொடர் போராட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுக்கப் போகின்றது. இதற்கே இவ்வளவு தூரம் போராட்டம் நடத்துபவர்கள் சமாதா னப் பேச்சு வார்த்தைகள் தீர்வுகள் எனச் சென்றால் எவ்வளவு தூரம் எதிர்ப்பார்கள்?என்பதும் வெளிப்படையானதே. அத்துடன் சமாதானப்பேச்சு வார்த்தைகளை ஆரம்பம் முதலே எதிர்த்து வந்த சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அதனை மீண்டும் ஆரம்பித்து தொடர்வாரா? என்பதெல்லாம் கேள்விக்குரிய விடயங்களே.



பொதுக்கட்டமைப்பு விடயத்தை இழுத்தடித்து அதற்கு இவ்வளவு தூரம் எதிர்ப்பலையை உருவாக்கிய அவர் அரசியல் தீர்வு தொடர்பில் எத்தகைய நிலையை உருவாக்குவார்? என்பதும் வெளிப்படையானதே

இப்பொழுது இவ்வருட இறுதியிலோ அல்லது அடுத்த வருட இறுதியிலோ நடைபெறப்போகும் சனாதிபதித் தேர்தல் குறித்தே தென்னிலங்கைக்கட்சிகளின் குறி முழு வதும் உள்ளது.

இதனடிப்படையில் பொதுகட்டமைப்பை உருவாக்குவதைத் தடுக்க சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலுள்ளோர் முன்வந்தால் அவர்களுக்கு சனாதிபதித் தேர்தலில் ஆதரவு வழங்க ஜே.வி.பி யும் ஜாதிக ஹெல உறுமயவும் தயார் நிலையில் இருப்பதாக தெரிவித்திருந்தன.

இப்பொழுது பொதுக்கட்டமைப்புக்கு எதிரான சக்திகளை சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலும் ஐ.தே.கட்சியிலிருந்தும் திரட்டுவதில் ஜே.வி.பி. முயன்றுவருகிறது. அதற்கும் மேலாக பொதுக் கட்டமைப்புக்கு எதிரான சக்திகள் சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் மேலோங்குமாக இருந்தால் மீண்டும் அக்கட்சியுடன் கூட்டுச்சேரும் கனவுடன் ஜே.வி.பி. உள்ளது.

ஜாதிக ஹெல உறுமய பஞ்ச விதிக்கொள்கை பொதுத்தலைவர் அல்லது புதியதலைமைத்துவத்துடன் சனாதிபதித்தேர்தலை எதிர்கொள்ளத் தயாராகிவருகின்றது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது பதவிக் காலத்தை எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்கு நீடித்து தனது அரசியல் எதிர்காலத் தைத் தக்கவைத்துக்கொள்ள முயற்சியைத் தொடர்கிறார். ஆனால் நவம்பர் மாதத்திற்குப் பின்னரும் அவரது பதவியை நீடிப்பதாயின் தனது நிறைவேற்று அதிகாரத்தை வலுவாகப் பயன்படுத்தவேண்டிய நிலை அவருக்கு ஏற்படும் அதனை அவ்வாறு அவர் பயன்படுத்தவும் கூடும்

**வேலவன்**

ஏனெனில் பொதுக்கட்டமைப்பை அவர் எவ்வாறு தான் பிரச்சாரப்படுத்தியபோதும் அது மட்டும் அவருக்கு வாக்கு வங்கியைப்பலப்படுத்த உதவப்போவதில்லை. கடந்த 14 மாதங்களாக அவரது ஆட்சி எதுவுமே செய்து விடவில்லை. எனவே கிடைக்கும் நிதியைப் பயன்படுத்தி அல்லது உலகநாடுகள் தள்ளுபடிசெய்யும் கடன் தொகைமூலம் மீதாமாகும் நிதியில் கவர்ச்சிகரமான திட்டங்கள் எவற்றையாவது நடை முறைப் படுத்தி இவ்வளவு காலமும் ஜே.வி.பி தான் அதற்குத் தடையாக இருந்தது என்று காட்டவேண்டிய தேவை அவருக்கு உள்ளது.


எனவே சனாதிபதித்தேர்தலை நோக்கியதான இந்த நகர்வுகளில் ஐ.தே.க வின் போராட்டங்கள் ஜே.வி.பி யின் போராட்டங்கள், சந்திரிகாவின் நிறைவேற்று அதிகாரம் என்பவற்றுக்கிடையே பலப் பரீட்சை தொடரும் என எதிர்பார்க்கலாம்.

* * * * *

# பொலித்தீன் பாவனையைக் குறைப்பதன் மூலம் சுற்றுச் சூழலைப் பாதுகாப்போம்

## தமிழீழ சுகாதார சேவையினர் அழைப்பு

தமிழீழப் பிரதேசத்தில்பொலித்தீன் பாவனையைக் குறைப்பதன் மூலம் சுற்றுச் சூழலைப்பாதுகாக்க முடியும். இவ்வாறு தமிழீழ சுகாதார சேவைப்பணிப்பாளர் விக்ரமன் தெரிவிக்கின்றார்.



இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில், பொலித்தீன், பிளாஸ்ரிக் பாவனை தற்காலத்தில் மிக அதிகளவில் காணப்படுகின்றது. இதனைக் குறைக்க முடியாதுள்ளது. ஏனெனில் மக்களின் அன்றாடப் பாவனைப் பொருட்களில் மிக முக்கியமானதொன்றாக இது மாறிவிட்டது. இதன் காரணமாகப் பொலித்தீன் வகைகளில் உக்கக்கூடிய பொலித்தீன்களைப் பாவனைக்குக் கொண்டு வருவதற்கான திட்டம் சர்வதேச ரீதியில் வகுக்கப்பட்டுள்ளபோதும் இலங்கையில் இதன் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதில்லை.

ஆனால் தமிழீழப் பிரதேசத்தில் இதனைக் கட்டாயமாக்கி உக்கல்நிலையை அடையக் கூடிய பொலித்தீன்களை உற்பத்தி செய்வதற்கென நெகிழம் எனும் தொழிற்சாலையும் உருவாக்கப்பெற்று உற்பத்திகள் நடைபெற்று வருகின்றன. இவை வெயில், காற்று படும் போது அழியக்கூடியவகையில் சில இரசாயனங்களையும், சோளம் மாவின் சில கூறுகளையும் பயன்படுத்தி உருவாக்கப்படுகின்றது. அதாவது தமிழீழப்பகுதியில் பயன்படுத்தும் பாவித்துவிட்டு கழிக்கப்படுகின்ற எல்லாவகையான பொலித்தீன்களுக்கும் இவ் இரசாயனங்கள் சேர்க்கப்படுகின்றன. இவற்றைவிட பொலித்தீன்கழிவுகள் அதற்கான கழிவிடங்களைத்தவிர பரவலாகப் போடப்பட்டு வருவதனால் நிலத்தின் கீழ் நீர் தேங்கும் போதும், கழிவுகள் தேங்கும்போதும், இலையான்கள், நுளம்புகள் என்பன பெருக்கமடைவதோடு நிலத்தின் தன்மையும் கெட்டுப் போகின்றது. இவற்றை ஓரிடத்தில் சேகரித்து உக்கக்கூடிய நிலைக்குக் கொண்டுவருவதால் சுகாதாரசீர்கேடுகள் குறைவாக இருக்கும். இதேவேளை பொலித்தீன்களை எரிக்கும் போது அதிலிருந்து வெளியேறும் இரசாயனங்களும் புற்றுநோயை ஏற்படுத்தக் கூடியவை என இனங்காணப்பட்டுள்ளது. எனவே இவற்றை அழிக்கும்போது சுகாதாரசீர்கேடுகள் ஏற்படுவதனால் இவற்றை மீளப்பயன்படுத்துவதே எமது பகுதிக்கு ஏற்றமுறை என்பது இனங்காணப்பட்டு அவற்றுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதைவிட பொலித்தீன் பயன்படுத்துவதற்குப் பதிலாக உணவு விடுதிகளில் இலைகளைப் பயன்படுத்த முடியும். அத்தோடு சிறிய தேவைகளுக்கு பேப்பர்களில் உற்பத்தி செய்யும் பைகளைப்பாவிக்க முடியும். இதற்காக சிறிய கைத்தொழிற்சாலைகளில் பேப்பர் பை உற்பத்தியை மேற்கொள்ள ஊக்குவிக்க வேண்டும். அத்தோடு பன்னவேலை பொருட்களை ஊக்குவிப்பதன் மூலமும் பொலித்தீன்பாவனையைக்குறைக்க முடியும். எனவே மக்கள் இவற்றைக் கருத்தில் கொண்டு தாம் பயன்படுத்தும் பொலித்தீன் கழிவுகளைத் தமிழீழ சுகாதார சேவையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் திண்மக் கழிவுப்பொருள் அகற்றும் பகுதிகளில் சேகரித்து வழங்குவதன் மூலம் சுகாதாரத்தைப் பேணமுடியும் என்று கூறினார்.(ச)

# மேல்மாகாண முதலமைச்சராக நந்தனமென்டிஸ் பதவிப்பிரமாணம்

## -ஐ.தே.க. கூரேக்கு ஆதரவு

(கொழும்பு)

மேல் மாகாணசபையின் முதலமைச்சராக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மாகாணசபை உறுப்பினர் நந்தனமென்டிஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார். புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட மேல்மாகாணசபை முதலமைச்சர் நந்தனமென்டிஸ் கடந்தவியாழனன்று மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலான முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியினதும், ஜே.வி.பி.யினதும் ஆதரவுடனேயே நந்தனமென்டிஸ் முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டதாக மேல்மாகாண ஆளுநர் தெரிவித்தார். மாகாண சபையின் பெரும்பான்மை தொடர்பாகவும் மேல் மாகாண சபைத் தலைவர்கள் கூட்டத்தில் ஆராயப்பட்டதாக அவர் கூறினார். இதேவேளை, மேல் மாகாண சபையின் பெரும்பான்மை யாருக்கு உள்ளதென்பது தெளிவாக விளங்குவதாகச் சுட்டிக் காட்டியுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் மேல்மாகாணசபைத் தலைவர் கித்சிறி கஹட்டப்பிட்டிய, வேறுகுழுவுக்கு பெரும்பான்மை காணப்படு மாயின் அதனை எழுத்து மூலமாக ஆளுநருக்கு அறிவித்து முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களை நியமிக்குமாறு கோரிக்கை விடுத்திருப்பதாகவும் அவர் கூறினார்.

புதிய முதலமைச்சராக நந்தன மென்டிசுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி மாகாணசபையை 26அங்கத்தவர்களும், ஜே.வி.பி. 23அங்கத்தவர்களும் ஆதரவளித்தபடியால் இவர் முதலமைச்சராக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் தற்போது ஐக்கிய தேசியக் கட்சி ரெஜினோல்ட் கூரேக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளபடியால் மீண்டும் ரெஜினோல்ட் கூரேயை முதலமைசசராக்க வேண்டுமென மாகாணசபை ஆளுனர் அலவி மௌலானாவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# நீதித்துறை தொடர்பான மூன்று சட்டமூலங்கள் நிறைவேற்றம்

(கொழும்பு)

நீதித்துறை தொடர்பான மூன்று சட்டமூலங்கள் கடந்த புதனன்று பாராளுமன்றத்தில் சில திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டுள்ளன. உடல் ரீதியான தண்டனையை அகற்றுதல், சிறைச்சாலைத் திருத்தங்கள், குற்றவியல் வழக்கு ஒழுங்கு விதிகள் தொடர்பான சட்டமூலங்களே நேற்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இந்த சட்டமூலங்களை நீதி மற்றும் சட்டமறுசீரமைப்பு அலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரட்ன பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார். குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்ட சவுக்கடித் தண்டனை புதிய சட்ட மூலத்தில் நீக்கப்பட்டிருப்பதாக நீதியமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஏதேனும் தவறுக்காக விதிக்கப்படும் தண்டனைக்கு மேலதிகமாக வழங்கப்படும் கடூழிய வேலைகளுடன் கூடிய உத்தரவை நீக்கவும் புதிய சட்டமூலத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் நீதி அமைச்சர் ஜோன் செனவிரட்ன மேலும் தெரிவித்தார்.

# பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தை சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ள முடியாது

## ஜே.வி.பி யின் தலைவர் கூறுகிறார்

(கொழும்பு)

பொதுமக்களைப் பிரதிநிதித் துவப்படுத்தாத தரப்புக்களுடன் சனாதிபதி சந்திரிகா செய்துகொள்ளும் ஒப்பந்தமானது எந்தவகையிலும் சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ள முடியாதென ஜே.வி.பி யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.கடந்த வியாழன் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

நோர்வேத் தரப்பினரோ அல்லது விடுதலைப் புலிகளோ மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் அல்லவெனவும், சனாதிபதி சந்திரிகா ஒருவரே மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒருவர் எனவும் சுட்டிக்காட்டியிருக்கும் தலைவர் சோமவன்ச அமரசிங்க, இந்த ஒப்பந்தத்தை எந்த வகையிலும் சட்டபூர்வமாக ஏற்றுக் கொள்ள முடியாது எனத் தெரிவித்துள்ளார். இந்த ஒப்பந்தத்தினூடாக திறைசேரியின் தலையீடு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டபோதிலும், எந்தவொரு உத்தியோகபூர்வமான தன்மையும் இந்த ஒப்பந்தத்தில் இல்லையெனவும் சோமவன்ச அமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் சில தவறுகளைச் சரி செய்துவிடலாம் எனவும், ஆனால் எழுத்து மூலம் செய்து கொள்ளப்படும் இவ் வாறான தவறுகளை வரலாற்றில் எப்போதும் சரிசெய்து கொள்ள முடியாது எனவும் செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

# அமைச்சு செயலர்களையும் அகற்ற சனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

முன்னர் ஜே.வி.பி யின் வசமிருந்த அமைச்சுக்களினது செயலாளர்களை பதவியிலிருந்து அகற்ற சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பணிப்புரை வழங்கியுள்ளார்.

இதேவேளை ஜே.வி.பி அரசாங்கத்தில் இருந்து விலகிய பின் இது வரைக்கும் எட்டு அமைச்சுக்களின் பொறுப்புக்கள் சனாதிபதி வசம் உள்ளன. விவசாயம், கால்நடை, காணிநீர்ப்பாசனம், மீன்பிடி அமைச்சு, கலாச்சாரம், தேசிய பாதுகாப்பு, சிறுகைத்தொழில், கிராமிய அபிவிருத்தி, பாதுகாப்பு, கல்வி, புனர்நிர்மாண மீள்கட்டமைப்பு ஆகிய அமைச்சுக்கள் சனாதிபதியின் கீழ் இயங்குகின்றன.

# மலையக தோட்டநிர்வாகிகள் சமூக நலன்புரியில் அக்கறையில்லை

## - ம.ம.முன்னணி குற்றச்சாட்டு

மலையகத் தோட்டங்களின் நிர்வாகப் பொறுப்புக்களைத் தனியார் துறையினர் ஏற்றுக் கொண்டதன் பின்னர் சமூக நலன்புரிவேலைத்திட்டங்களான தேயிலைச் செடிகளை பராமரித்தல், பாதைகளைத் திருத்தம் செய்தல், தொழிலாளர் குடியிருப்புக்களை அபிவிருத்தி செய்தல் போன்ற விடயங்களைக் கைவிட்டுள்ள நிலையில், தற்போது தேயிலைத் தொழிற்சாலைகளையும் மூடுவதற்கு முயல்வதாக மலையக மக்கள் முன்னணியின், ஊவா மாகாண சபை உறுப்பினர் அரவிந்தகுமார் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தனியார் நிறுவனங்கள் உற்பத்திக் கிரயத்தைக் குறைப்பதாகக் கூறிக் கொண்டு தொழிற்சாலைகளை மூடும் நடவடிக்கையினை, தமது கட்சி வன்மையாகக் கண்டிப்பதாகவும், இதன் காரணமாக பல தொழிலாளர்கள் தமது தொழிலை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தொண்டராசிரியருக்கு மீண்டும் நேர்முகப் பரீட்சை இ.த.ஆ.சங்கத்திடம் கல்வியமைச்சு உறுதி

(கொழும்பு)

இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த வட கிழக்கு மாகாண தொண்டராசிரியர் நேர்முகப்பரீட்சையை மீண்டும் நடாத்த கல்வியமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளது. இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் என். இராஜநாதன், பொதுச் செயலாளர் த.மகாசிவம் ஆகியோர் கடந்த வியாழனன்று கல்வியமைச்சின் செயலர் தாராடிமெல்லைச் சந்தித்துக் கலந்துரையாடியபோது மேற்படி இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. கஷ்ரம், அதிகஷ்ரப்பிரதேச பாடசாலைகளில் கடமையாற்றிய தொண்டர் ஆசிரியர்களுக்கே இந் நேர்முகப்பரீட்சை தொடர்ந்து நடைபெறவிருக்கிறது. முக்கிய நிபந்தனையாகவிருந்த பல்கலைக்கழகத் தெரிவிற்கு ஆம் என்ற நியதி விலக்கிக் கொள்ளப்பட்டிருக்கிறது என்றும் செயலாளர் கூறினார். தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஆட்சி மன்றக் கூட்டத்தின்போது எடுத்த தீர்மானத்தில் முதல் கோரிக்கையான தொண்டராசிரியர் நேர்முகப்பரீட்சையை மீண்டும் நடாத்த இணங்கியமைக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. எஞ்சிய தொண்டராசிரியர்களுக்கு எழுத்துப்பரீட்சை மூலம் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

# பொல்காவெலயில் வீதி விபத்து நால்வர் உயிரிழப்பு!

பொல்காவெலயில் நேற்றுமுன்தினம் காலை நடந்த வீதி விபத்தில் நால்வர் உயிரிழந்தனர். பொல்காவெல மெட்டிக்கும்புர என்னும் இடத்தில் கல்நாவயிலிருந்து கொழும்பு நோக்கி வந்த தனியார் பேருந்து ஒன்றும், முச்சக்கரவண்டியொன்றும்மோதி விபத்துக்குள்ளானது.

நேற்றுமுன்தினம் காலை 6.30 மணிக்கு நடந்த இவ்விபத்தில் முச்சக்கர வண்டியில் பயணம் செய்த தாயும் தந்தையும் சம்பவ இடத்திலேயே பலியானார்கள். வண்டியில் இருந்த அவர்களின் இரு பிள்ளைகளும் கடும் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதிலும், அவர்களும் அங்கு உயிரிழந்தனர். பொல்காவெல சிறிலங்கா பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். தனியார் பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

# மேல்நீதிமன்ற நீதிபதி கொலைவழக்கு ஜீலை 4 ஆம் திகதி இறுதித் தீர்ப்பு

(கொழும்பு)

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய கொலை வழக்கின் இறுதித்தீர்ப்பு அடுத்த மாதம் 4ஆம் திகதி அறிவிக்கப்படுமென, மேல்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய மற்றும் அவருடைய மெய்ப்பாதுகாவலர் ஒருவரும் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகள் கடந்த வியாழனன்று கொழும்பில் நடைபெற்றுள்ளது. மூவரடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலையில் நடைபெற்ற இந்த வழக்கு விசாரணைகளின் நிறைவில், நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

கடந்த வருடம் நவம்பர் 19ஆம் திகதி, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய மற்றும் அவருடைய மெய்ப்பாதுகாவலர் ஆகியோர் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஐந்து பேருக்கு எதிராக கடந்த 21 நாட்களாக விசாரணைகள் இடம் பெற்றுவந்துள்ளதுடன், இதன்போது 41 பேர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஜே.வி.பி யுடன் தொடர்புடைய தொழிற்சங்கங்களை அணிசேர்க்க தீவிர நடவடிக்கை

(கொழும்பு)

ஜே.வி.பியுடன தொடர்புடைய தொழிற்சங்கங்களுடன் இணைந்துகொள்ள முன்வருமாறு முன்னாள் அமைச்சர் அநுரகுமார திஸ்ஸநாயக்க தொழிற்சங்கங்களூடாகத் தமக்கு அழைப்பு விடுத்ததாக இலங்கை நிலப்படவியலாளர் சங்கம் குற்றஞ் சாட்டியுள்ளது.

இவ்வாறு இணைந்து கொள்ளவதன் மூலம் தமது தொழிலில் காணப்படும் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியுமென தமக்கு உறுதியளிக்கப்பட்டிருந்ததாகவும் இலங்கை நிலப்படவியலாளர் சங்கத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பின நிஹால் பிரான்ஸிஸ்கோ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம கொழும்பில் நடைபெற்ற செய்தியாள் மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தகவல் வெளியிட்டுள்ளார்.

எனினும் இதனை மறுத்துள்ள முன்னாள் அமைச்சர் அநுரகுமார திஸ்ஸநாயக்க, நிலப்படவியலாளர்கள் சங்கத்தின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில்,

இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதில் எந்தவித உண்மையும் கிடையாதெனத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தாம் பதவி விலகியதன் பின்னர் இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளமையில் எந்தவித நியாயமும் கிடையாது எனவும் முன்னாள் அமைச்சர் அநுரகுமார திஸ்ஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

# பொதுத்தேர்தல் விரைவில் நடக்கும்!

பொதுத் தேர்தலொன்று விரைவில் நடாத்தப்படுவதற்கு வாய்ப்புக் காணப்படுவதாக சுகாதாரத்துறை அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா தெரிவித்துள்ளார்.

கடற்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மஹாமோதர வைத்தியசாலையைப் புனரமைப்பதற்கான நிதியுதவியை வழங்கும் நிகழ்வொன்றில் கலந்துகொண்டிருந்த ஜேர்மனியத் தூதுவர் ஜேர்கன் வீரத்தை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தும் போதே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் இரண்டாவது வரவு செலவுத்திட்டத்தை பாராளுமன்றத்தில் சமாப்பிக்க முடியாதுபோனால் உடனடியாக பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தலொன்று நடாத்தப்படுமென சுகாதாரத்துறை அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியினர் ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடாத்துமாறு கோரிவருவதாகவும் எனினும், சனாதிபதித் தேர்தல் அடுத்தவருடம் நவம்பர் மாதத்தில் நடாத்துவதற்கே திட்டமிடப்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ள சுகாதாரத்துறை அமைச்சர்.

இந்த வருடம் நவம்பர் மாதம் வரவு செலவுத்திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியாது போனால் பாராளுமன்றத் தேர்தலொன்று நடாத்தப்படுமெனவும் கூறினார்.

இதேவேளை, கடற்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மஹாமோதர வைத்தியசாலையின் புனரமைப்புப் பணிகளுக்கென ஜேர்மன் அரசாங்கம் 5மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியினை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## வாழ்த்துகிறோம்



தமிழர் வரலாற்றில்
முதன் முறையாய்
கம்பன் கழகத்தின்
கம்பன் புகழ்
விருதினைப் பெற்ற
பெண்மணி
எமது பாசத்திற்கும்
நேசத்திற்கும்
பெருமதிப்புக்குமுரிய

திருமதி
அபிராமி கைலாசபிள்ளை
அம்மா

நாடளாவிய ரீதியில் தாங்கள் ஆற்றிய சமூக, சமயப் பணிகளுக்காகவும் கம்பன்கழக விருதினைப் பெற்ற இவ் அதியுயர் கௌரவத்திற்காக தங்களை மனமுவந்து வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். தங்கள் சேவை தொடர்ந்து எமக்குக் கிடைக்க தங்கள் நலனுக்காகவும், நீண்ட ஆயுளுக்காகவும் இறைவனையும், எமது குரு சிவயோக சுவாமிகளையும் பிரார்த்திக்கின்றோம்.

முதியோர், ஊழியர், நிர்வாக உறுப்பினர்கள்.
யோக சுவாமி திருவடி நிலையம் முதியோர் இல்லம்
வன்னேரிக்குளம்- கிளிநொச்சி.

(சி.12232)

## நீங்காத நினைவில் ஆறாண்டு

பிறப்பு 27 – 12 – 1981



வீரச்சாவு 26 – 06 – 1999

வீரவேங்கை சுதா/ கலைச்செல்வி
டேவிற் மேரி சுகிர்தா

தானைத் தலைவன் அணியில்
தாய் மண்ணின் மீட்புக்காய்
தன்மானத் துணிவோடு களமாடி
தன்னுயிரைத் தியாகம் செய்த
எம் செல்லச் சுகியே
உன் புன்னகை முகமும்
கள்ளமில்லாப் பேச்சும்
எம் நெஞ்சைவிட்டகலாது.
உன்பிரிவால் வாடும்

முகவரி,
ஒஸ்கா
09 ஆம்வட்டாரம்,
புதுக்குடியிருப்பு

குடும்பத்தினர்

(6175)

## ஓராம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 13 – 04 – 1960



உதிர்வு 06 – 07 – 2004

செல்வராசா ஞானமலர் (மலர்)

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்ற எமது துணைவிளக்கான மலரின் ஓராண்டு நினைவில் அவரின் ஆத்மசாந்திக்கு வேண்டி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி

உன்பிரிவால் துயருறும்,
அன்புக் கணவர்,
உன்சகோதரர்,
பிள்ளைகள்

தகவல்:- சி. செல்வராசா கணவர்,
186/1 அதிசயவிநாயகர் வீதி,
விசுவமடு.

(6298)

## நினைவஞ்சலி



பிறப்பு 22 – 08 – 1961

இறப்பு 26 – 12 – 2004

கள்ளமில்லா கருணைகொண்டு
களங்கமில்லா உள்ளம்கொண்டு
அவனிதனில் எமை அணைத்து
அன்னையாய் வலம் வந்தீரே...
எந்நாளும் தரணியிலே உமை
நினைத்திடுவோம்நாமே

நினைவுகளுடன்
உன் புதல்வனின்
நண்பர்கள்.

(6176)

# காஷ்மீரில் தீவிரவாதிகள் தாக்குதல் 6 இராணுவத்தினர் பலி; 20 பேர் படுகாயம்

காஷ்மீரில் தீவிரவாதிகள் நடத்திய கார்க்குண்டுத்தாக்குதலில் ஆறு இராணுவத்தினர் பலியாகினார்கள்; 20 பேர் படுகாயமடைந்தனர்.

காஷ்மீர் தலைநகர் சிறிநகரின் புறநகர் பகுதியில் உள்ள வடக்கு போர்ஷோர் சாலையில் இராணுவத்தினர் நேற்று முன்தினம் பிற்பகல் டிரக்குகளில் சென்று கொண்டிருந்த போது வீதி ஓரத்தில் ஒரு மாருதி காரில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்தது. இதில் டிரக்குகளில்வந்த இராணுவத்தினர் தூக்கி எறியப்பட்டனர்.

அவர்களில் ஆறு பேர் அதே இடத்தில் உடல்சிதறி இறந்தனர். மேலும் 14 இராணுவத்தினர் உட்பட 20 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்களில் பலரது உடல்நிலை கவலைக்கிடமாகவுள்ளது. அவர்கள் பல்வேறு மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

காஷ்மீரில் செயற்பட்டுவரும் பெரிய தீவிரவாதஇயக்கமான ஹிஸ்புல் இந்தத் தாக்குதலுக்கு உரிமை கோரியுள்ளது. அந்த இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர் உள்ளூர் பத்திரிகை அலுவலகத்திற்கு அந்தத்தகவலைத் தொலைபேசியில் கூறினார்.

குண்டுவெடித்த இடத்தை இராணுவத்தினர் சுற்றிவளைத்துள்ளனர். குண்டுவைத்த தீவிரவாதிகளை இராணுவத்தினர் தேடி வருகிறார்கள். காஷ்மீரில் கடந்த15 நாட்களில் வெடித்த இரண்டாவது கார்க்குண்டு இதுவாகும். கடந்த 15 ஆம் திகதி புல்வாரா என்ற இடத்தில் கார்க் குண்டு வெடித்ததில் 20 பேர் கொல்லப்பட்டனர்.120 பேர் காயமடைந்தனர்.

# இந்தியப்பிரதமர் அமெரிக்கா பயணம்

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் அடுத்த மாதம் அமெரிக்கா செல்கிறார். இந்தியாவுக்கு எப்18 ரக போர் விமானங்கள் வாங்குவதுபற்றி அமெரிக்க அதிபர் புஷ்சுடன் முக்கிய பேச்சுவார்த்தை நடாத்துவார் எனத் தெரிகிறது.


அமெரிக்கா தனது எப்-18ரக போர் விமானங்களை பாகிஸ்தானுக்கு விற்க முன்வந்தது. அதற்கு இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்தது. அதற்குப் பதில் அளித்த அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் இந்தியா விரும்பினால் இந்தியாவுக்கு எப்-18 ரக விமானங்கள் வழங்க தயார் என்றார்.

அமெரிக்காவின் இந்த அறிவிப்புஇந்தியாவின் பரிசீலனையில் உள்ளது. இந்த நிலையில் பிரதமர் மன்மோகன்சிங் அடுத்த மாதம் அமெரிக்கா செல்கிறார் அவரது சுற்றுப்பயண நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. சமீபத்தில் அமெரிக்க வெளியுறவு மந்திரி கொண்டலிசாரைஸ் இந்தியா சென்றிருந்தபோது பிரதமர் மன்மோகன்சிங்கின் அமெரிக்கப் பயணம் பற்றி ஆலோசனை நடத்தினார்.

மன்மோகன்சிங் தனது அமெரிக்க பயணத்தின்போது இந்திய விமானப் படைக்கு அமெரிக்காவின் எப்-18 போர் விமானங்கள் மற்றும் நவீன ஆயுதங்கள் வாங்குவது தொடர்பாக அதிபர் புஷ்சுடன் முக்கிய பேச்சுவார்த்தை நடாத்துவார் என்று தெரிகிறது.

## ஆறாம் ஆண்டு நீங்காத நினைவில்

தாயின் மடியில் 20 - 04 - 1972



தாயக மண்ணில் 26 - 06 - 1999

### வீரவேங்கை மேஜர் யாழிசை

(பரராஜசிங்கம்–மங்கயற்கரசி)

சொ.முகவரி–யாழ்.
த.முகவரி–3 ஆம் கண்டம்,கெருடமடு,
முத்தையன்கட்டு

கரிகாலன் சேனையில்
தடம் பதித்து–மண்ணின்
மானம் காக்க மறத்தமிழன்
சேனையில் காவியமான
எமது குழந்தைகளுக்காக.

இந்நாளில் இவருடன் வீரகாவியமான லெப். கேணல் தனிகைச் செல்வி,மேஜர் தேன்மொழி(டிலானி) உட்பட அனைத்து மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்.

தகவல்:
மேஜர் யாழிசை குடும்பத்தினர்,
போராளிகள்.

(6303)

## கருணாகரன் கட்சியுடன் மற்றொரு கட்சி இணைவு

கேரளாவில் கருணாகரன் கட்சியோடு மற்றொரு கட்சி இணைகிறது. கேரளாவில் காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகிய முன்னாள் முதல்வர் கருணாகரன் தேசிய காங்கிரஸ்-இந்திரா என்ற பெயரில் தனிக்கட்சி தொடங்கினார், அந்தக் கட்சிக்கு கருணாகரன் மகன் முரளீதரன் தலைவராக உள்ளார்.

கருணாகரன் கட்சிக்கு ஆதரவாக காங்கிரசில் 14 சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

இந்த நிலையில் பி.பி. சுலைமான் ராவுத்தர் தலைமையிலான காங்கிரஸ்கட்சியின் ஒரு பிரிவினர் சுலைமான் ராவுத்தர் தலைமையில் கருணாகரனின் தேசிய காங்கிரஸ்-இந்திராவில் இணைய முடிவு செய்துள்ளனர்.

இதற்கான இணைப்பு விழா கருணாகரன்,முரளீதரன் முன்னிலையில் கொச்சியில் ஜூலை நான்காம் திகதி நடக்கும் என்று சுலைமான் ராவுத்தர் அறிவித்தார். இதன் மூலம் கருணாகரன் கட்சிக்கு புதிய பலம் கிடைக்கிறது.

# கேரள காங்கிரஸ் தலைவராக சென்னிதாலா தெரிவானார்

கேரளா மாநில காங்கிரஸ் கட்சியில் புதிய தலைவராக சென்னிதாலா தேர்வு செய்யப்பட்டு இருக்கிறார்.

கேரள காங்கிரஸ் கட்சியில் பல்வேறு மாற்றங்கள் செய்வது தொடர்பாக காங்கிரஸ் தலைவர் சோனியா கேரள மாநில காங். நிர்வாகிகளுடன் தீவிர ஆலோசனை நடத்தினார். கேரள மாநிலமுதல்வர் உம்மன்சாண்டி உட்பட பலரிடம் சோனியா இதுபற்றி விவாதித்தார். இந்த நிலையில் உம்மன் சாண்டி. ஏ.கே. அந்தோணி ஆகியோரின் ஆலோசனைப்படி தற்போது கேரள மாநில காங்கிரஸ் கட்சியின் புதிய தலைவராக சென்னிதாலா தேர்வு செய்யப்பட்டு இருக்கிறார். காங்கிரஸ் கட்சி செய்தித்தொடர்பாளர் ஜெயந்தி நடராஜன் இந்தத் தகவலை நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளார்.

49 வயதான சென்னிதாலா நான்கு முறை மக்களவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஆவார். காங். காரிய செயற்குழு நிரந்தர அமைப்பாளராகவும் அவர் நியமிக்கப்பட்டிருந்தார்.



மத்திய பிரதேச தலைநகரம் போபால் அருகே நேற்று முன்தினம் வானில் கருமேகங்கள் சூழ்ந்தன. மழை பெய்யுமா? என்ற ஆவலுடன் விவசாயி ஒருவர் அன்னார்ந்து பார்க்கின்றார். போபால் பிரதேசத்தில் நீண்டகாலமாக மழை பெய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
கிளிநொச்சி மாவட்டக்கிளை
கிளிநொச்சி

புதிய கணினிப் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**Diploma In Office Management**
*Duration:05 Months*

**Diploma In Desktop Publishing**
*Duration:05 Months*

**Diploma In Multimedia Graphics**
*Duration:05 Months*

**Diploma In Hardware Engineering**
*Duration:03 Months*

க.பொ.த உயர்தர மாணவர்களும்,அலுவலர்களும் விண்ணப்பிக்கலாம்.
விண்ணப்பங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை.

விண்ணப்ப முடிவுத்திகதி: 05.07.2005

கணினிப்பிரிவு
இ. செ. சங்கம்
கிளிநொச்சி.

(சி.12259) தொடர்புகளுக்கு தொலைபேசி:0211228 5843

## ஆறாத்துயருடன் ஆறாம் மாதத்து அஞ்சலி



அமரர்–இராசையா–மகேஸ்வரி
வத்திராயன் -வடக்கு
தாளையடி



இரவிந்திரராசா–ஜெசி
உடுத்துறை–வடக்கு
தாளையடி.


**கடந்த 26.12.2004 அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தினதும். அன்புச் செல்வத்தினதும்ஆறாம்மாத நினைவு நாள்...**

கண்ணீரின் காலமது ஆறுமாதமென கனமாகிப் போனதம்மா!
எம் வாழ்வில் நீங்கள் இல்லாது வேதனையில் வாடுகிறோம்.
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன?
எங்கள் ஜெசி தனிமையென்றுணர்ந்து கூடிச்சென்றீர்களோ
அம்மா வென்றழைக்க நீங்கள் இல்லையே அம்மா!
ஜெசி தம்பியுடன் அன்னை முகம் தழுவ
அடுத்தொருபிறவி எடுத்துவர ஆவலாய் உள்ளோம்...
தினம் மெழுகாய் உருகி எமை வளர்த்தீர்கள் அம்மா!
வேதனைகள் வரும்போது அருகிருந்து தீர்த்தீர்கள்-இன்று
நீங்கள் இல்லாது தீராத வேதனையில் தினம் தினம் துடிக்கின்றோம் அம்மா!
உளமாரத் தொழுகின்றோம் உங்கள் திருவுருவப்படமதனை.
ஓம்சாந்தி... சாந்தி... சாந்தி

அன்றைய தினம் இறைபதம்அடைந்த அனைத்துத் தேச உறவுகளையும் நினைவு கூருகின்றோம்.

குடும்பத்தினர்,
வத்திராயன் வடக்கு

(6302)





தேசிய ரீதியில் மெய்வல்லுநர் போட்டிகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற தமிழீழத்தின் சாதனையாளர்களான திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த ரவீந்திரன் ரதீசன், கே. முகமட் ஹாரீஸ் இவர்களின் பயிற்றுவிப்பாளர் விஜயநீதன் ஆகியோர் நேற்று தமிழீழ விளையாட்டுத்துறையினரால் கௌரவிக்கப்பட்டனர். (படங்கள் : லோகீசன்)

## வருடாந்த விளையாட்டு விழா

உடையார்கட்டு தெற்கில் அமைந்துள்ள விவேகானந்தா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நிகழ்வு நாளை பி.ப. 2.00 மணிக்கு குரவில் தமிழ் வித்தியாலய மைதானத்தில் முன்பள்ளி பெற்றோர் சங்கத் தலைவர் செ. அசோக்குமார் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மு. குரவில் தமிழ் வித்தியாலய அதிபர் மேகநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (19)

## கலந்துரையாடல்

முல்லை மாவட்டத்தில் உதைபந்தாட்ட அணியினை உருவாக்கும் நோக்கோடு முல்லை மாவட்ட விளையாட்டுத்துறையும், முல்லை மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனமும் இணைந்து இன்று காலை பத்து மணிக்கு முல்லை மாவட்ட அரசியல் துறைச்செயலகத்தில் கலந்துரையாடல்ஒன்று நடைபெற உள்ளதால் ஆர்வமும், விருப்பமும், திறமையும் உள்ள முல்லை மாவட்ட எல்லைக்குட்பட்ட அனைத்து உதைபந்தாட்ட வீரர்களையும் கலந்துகொள்ளுமாறு முல்லை மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் எம்.காளி தெரிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளும் வீரர்களை ஒருங்கிணைத்து பயிற்சியின் பின் 2005 ஆம்ஆண்டுக்கான முல்லை மாவட்ட அணி தெரிவு செய்யப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (20)

## அஸ்ரா கிண்ண கிரிக்கெட் போட்டி

# யூனியன் கல்லூரி அணிக்கு வெற்றி



யூனியன் கல்லூரி அணியினர்

17வயது அஸ்ரா கிண்ண கடினப்பந்து போட்டியில் யூனியன் கல்லூரியை எதிர்த்து ஆடிய கிளி. ம.வி. அணி சமநிலையில் ஆட்டத்தை முடிவிற்குக் கொண்டு வந்தது. புள்ளி அடிப்படையில் யூனியன் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கிளி. ம.வி. அணித் தலைவர் சி. ஜெயசீலன் தனது அணியை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தார். கிளி. ம.வி. அணியினர் 41.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றது. அதன்படி ப. துஷ்நந்தன் 56 ஓட்டங்களையும், ப. ஜெசிதரன் 12 ஓட்டங்களையும், க. அனுசன் 11 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் கலில்ராஜ் மூன்று விக்கெட்டுக்களையும், நகீசன் நான்கு விக்கெட்டுக்களையும், பென்ஜோய் இரண்டு விக்கெட்டுக்களையும், பிரசாந்தன் ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி அணியினர் 50.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 276 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் டக்சஜன் 53 ஓட்டங்களையும், பென்ஜோய் 49 ஓட்டங்களையும் கலில்ராஜ் 47 ஓட்டங்களையும், தர்சன் 36 ஓட்டங்களையும், ஜயனீதன் 21 ஓட்டங்களையும், பிரணவரூபன் 19 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் ரவிக்குமார், ஜெயசீலன் தலா மூன்று விக்கெட்டுக்களையும், அனுசன் இரண்டு விக்கெட்டுக்களையும், சேந்தராஜ், அமுதகுமார் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். கிளி. ம.வி. அணியினரின் துல்லியமான பந்து வீச்சில் இரண்டு அரைச் சதங்கள் தடுக்கப்பட்டன.

பின்னர் தமது இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்த கிளி. ம.வி. அணியினர் ஒரு நாள் போட்டி போன்று அடித்து ஆடினர். அதன்படி 15 ஓவர்களில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 81 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் ஜெயசீலன் 26 பந்துகளில் 42 ஓட்டங்களையும், அமுதகுமார் 11 ஓட்டங்களையும், ஜெசிதரன் ஆட்டமிழக்காமல் 12 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சிறிமதன், பிரசாந்தன் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர். புள்ளிகள் அடிப்படையில் யூனியன் கல்லூரி அணி வெற்றிபெற்றது.



கிளி. ம.வி. அணியினர்

(படங்கள் : சோதி)

## கரும்புலிகள் நாளை முன்னிட்டு வடமராட்சி கிழக்கில் பல்வேறு போட்டிகள்

கரும்புலிகள் நினைவு நாளை முன்னிட்டு வடமராட்சி கிழக்குப் பகுதியில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் உடுத்துறை மகா வித்தியாலய மைதானத்தில் காலை 9.00 மணியளவில் வடமராட்சி கிழக்கு விளையாட்டுக்கழகங்களுக்கிடையில் கிரிக்கெட் போட்டி ஆரம்பமானது.

மேற்படி நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கினை உடுத்துறை மகாவித்தியாலய அதிபர் அரியகுமார் ஏற்றிவைத்தார். தொடர்ந்து தமிழீழத்தேசியக்கொடியினை வடமராட்சி கிழக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் நிலவன் ஏற்றிவைத்தார்.

நாளை ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி மருதங்கேணி பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. வரும் 30 ஆம் திகதி படகு ஓட்டம், கடற்பந்தாட்டம், கடல் அஞ்சல் ஆகிய போட்டிகள் தாளையடி கடலில் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து ஆண், பெண் இரு பாலாருக்குமான கடல் நீச்சல் போட்டிகள் 01-07-2005 அன்று நடைபெறவுள்ளது. இதில் ஆண்களுக்கு தாளையடியில் இருந்து ஆழியவளை வரையும், பெண்களுக்கு உடுத்துறையில் இருந்து தாளையடி வரையும் நீந்தி கடக்க வேண்டிய தூர எல்லைகள் ஆகும். தொடர்ந்து மரதன் ஓட்டப் போட்டிகள் என்பன இடம்பெறவுள்ளன. இத்துடன் கரும்புலிகளின் படங்களைத தாங்கிய ஊர்தி வடமராட்சி கிழக்கில் உள்ள இடங்களுக்கு பவனியாக செல்லவுள்ளது. இறுதி நாள் கலை நிகழ்வுகள் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (தீ, ச)

# தோல்வியால் பயந்து விட மாட்டோம்

– ரெஸ்கொதிக்



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தோல்வியால் பயந்துவிடமாட்டோம். இந்தத் தோல்வி மேலும் தொடராமல் பார்த்துக்கொள்வோம் என இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் துணைத் தலைவர் ரெஸ்கொதிக் தெரிவித்துள்ளார். மிகவும் தன்னம்பிக்கையுடன் உள்ளோம். 40 ஓவரிலேயே எங்கள் அணி (இங்கிலாந்து ) வீரர்கள் அனைத்து விக்கெட்டையும் இழந்து விடுவர் என்று நினைத்தேன்.ஆனால் அவர்கள் பொறுப்புணர்ந்து 50 ஓவர்கள் வரை நின்று ஆடினர்.இவ்வாறு ரெஸ்கொதிக் கூறினார்.





# சிறிலங்காவில் நடைபெறும் கிரிக்கெட் தொடர் திகதிகளில் மாற்றம் அறிவிப்பு



சிறிலங்காவில் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள மேற்கிந்தியத்தீவுகளுடனான டெஸ்ட் போட்டியும், இந்தியா பங்குபற்றும் முக்கோண ஒரு நாள் போட்டியும் நடைபெறும் திகதிகளில் மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளதாக சிறிலங்கா கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. இந்திய அணி வரும் ஆகஸ்ட் நடுப்பகுதியில் ஆசிய, ஆபிரிக்க பதினொரு பேர் அணிகளின் நலநிதி சேகரிப்புப் போட்டி ஒன்றில் கலந்து கொள்ளவிருப்பதால் சிறிலங்காவுடனான தொடரை முன்கூட்டி நடத்த வேண்டியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன்படி ஜூலை 14ஆம் திகதி ஆரம்பிக்கவிருந்த சிறிலங்கா - மேற்கிந்தியத்தீவுகளின் முதலாவது டெஸ்ட் போட்டி ஜூலை 13ஆம் திகதி ஆரம்பமாகும். இரண்டாவது டெஸ்ட் 21ஆம் திகதி நடைபெறும். இப்போட்டிகளுக்கு முன்பு ஜூலை எட்டாம் திகதி மூன்று நாள் பயிற்சிப் போட்டி ஒன்றும் நடைபெறும்.

# அன்ரு சைமன்ஸ் அபார பந்து வீச்சு

# அவுஸ்திரேலியாவுக்கு 10 விக்கெட் வெற்றி



இங்கிலாந்தில் நடைபெற்று வரும் நட்வெஸ்ட் கிண்ண முக்கோண ஒரு நாள் கிரிக்கெட் போட்டியின் நேற்றைய கடைசி லீக் ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணி பங்களாதேஷ் அணியை பத்து விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

ஓல்ட் ரபோட் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலியா பங்களாதேஷ் அணியை துடுப்பெடுத்தாடப் பணித்தது.

முதலில் ஆடிய பங்களாதேஷ் சகலதுறை வீரர் சைமன்சின் பந்து வீச்சில் திணறியது. அந்த அணி 35.2 ஓவரில் 139 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் நபீஸ் 47, அஸ்ரபுல் 58 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர். நான்கு வீரர்கள் ஓட்டமெதுவும் பெறாது ஆட்டமிழந்தனர். இதில் ஹபிபுல் பசாரும் ஒருவர்.

பந்து வீச்சில் சைமன்ஸ் 7.2 ஓவர் பந்து வீசி 18 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். ஹொக் மூன்று விக்கெட்டை வீழ்த்தினார்.

வெற்றியிலக்கு நோக்கி ஆடிய அவுஸ்திரேலியா 18.5 ஓவரில் விக்கெட் இழப்பின்றி வெற்றி இலக்கை அடைந்தது. ஹெய்டன், கில்கிறிஸ்ட் தலா 66 ஓட்டங்களைப் பெற்றனர்.




# விம்பிள்டன் டென்னிஸ் சபீன் அதிர்ச்சி தோல்வி

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியின் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்று ஆட்டத்தில் ரஷ்ய வீரர் மரட்சபீன் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார். கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் போட்டி லண்டனில் நடைபெற்று வருகின்றது.இதன் ஆண்கள் பிரிவில் நடந்த மூன்றாவது சுற்று ஆட்டம் ஒன்றில் ரஷ்யாவைச் சேர்ந்த ஐந்தாம் நிலை வீரரான மரட்சபீன் 26ஆம் நிலை வீரரான பெல்சியனோ லோபெசைஎதிர் கொண்டார். பரபரப்பாக நடந்த இந்த ஆட்டத்தில் மரட்சபீன் 4-6,6-7 (4-7), 3-6 என்ற நேர்செட் கணக்கில் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார். சம்பியன் பட்டம் வெல்வார்கள் என்று எதிர்பார்த்தவீரர்களில் மரட்சபீனும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.மற்ற ஆட்டங்களில் ஹெவிட், பெர்ணாண்டே, கொன்சலஸ், டெய்லர் டென்ட் ஆகியோர் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினர்.

பெண்கள் பிரிவில் நடந்த மூன்றாவது சுற்று ஆட்டம் ஒன்றில் மூன்றாம் நிலை வீராங்கனையான அமெலி மவுரெஸ்மோ, அமெரிக்காவைச் சேர்ந்த செனாய் பெரியுடன் மோதினார்.அனுபவம் மிக்க வீராங்கனையான மவுரெஸ்மோ 6-0, 6-2 என்ற நேர்செட்கணக்கில் எளிதாக வெற்றி பெற்றார்.

யாழ்ப்பாணம்





## சிந்தனைக்கு

மக்களின் விடுதலை உணர்வை அடக்கு முறையால் அழித்துவிட முடியாது; உலக வரலாறு பகரும் உண்மை இது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 26-06-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## எரியும் நெருப்பாக்கிவிட்டு....!

பெரும் இழுபறிகள், கால தாமதம் இவற்றின் பின்னர் பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது. இவ் ஒப்பந்தத்தின்நோக்கம். அதற்கான கால வரம்பு என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு பார்க்கையில் இது ஒரு மட்டப் படுத்தப்பட்டளவிலானதொரு புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைக்கான உடன்பாடு என்பது வெளிப்படையானது.

இத்தகைய ஒப்பந்தம் ஒன்றைச் சிறிலங்கா அரசு செய்து கொள்வதற்கு நோர்வே அரசு பகிரத முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியதாக இருந்தது. விடுதலைப்புலிகள் இயக்கம் ஒன்றன் பின் ஒன்றாக பல விட்டுக்கொடுப்புக்களைச் செய்யவேண்டியதாக இருந்தது. அதாவது சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை மேம்பட இத்தகைய விட்டுக்கொடுப்புக்கள் அவசியமானவையாக இருந்தன.

ஆனால் இவ் உடன்பாடு சுனாமியினால் பாதிப்பிற்குள்ளாகிய மக்களுக்கான புனர்வாழ்வுப் புனரமைப்புப்பணி எனத் தெரிந்திருந்தும் சிறிலங்கா அரசாங்கம் இலகுவில் உடன்பாட்டிற்கு வரச்சம்மதிக்க வில்லை. ஆறு மாதங்கள் செய்த இழுத்தடிப்பின் பின்னரே உடன்பாட்டிற்கு அது வந்துள்ளது.

அதிலும் ஏதோ தானாகச் சிந்தித்து- மக்களின் அவலங்களைப்புரிந்து கொண்டு அரசாங்கம் வந்ததாக இல்லை. சர்வதேச சமூகம் கொடுத்த நிர்ப்பந்தத்தில் இருந்தே இவ்வுடன்பாட்டிற்கு அரசாங்கம் வந்தது. இவ் அழுத்தமானது ஐ.நா. செயலரில் இருந்து சிறிலங்காவிற்கு உதவிவழங்கும் நாடுகள் வரையில் கொடுக்கப்பட்டதெனலாம்.

ஆனால், தற்பொழுது பொதுக்கட்டமைப்பு உடன்பாடு கையொப்பமிடப்பட்டதாயினும்,இவ்வுடன்பாட்டின்அமுலாக்கத்தைப் பொறுத்தே இதன் வெற்றிதங்கியுள்ளது. ஆனால், இதன் அமுலாக்கம் எத்தனைதூரம் சாத்தியமானது? செய்துகொள்ளப்பட்ட உடன்பாட்டின் படி அரசாங்கம் நடந்துகொள்ளுமா? இவையே இன்றுள்ள முக்கிய கேள்வியாகும்.

ஏனெனில் உடன்பாட்டிற்கு எதிராகப் பேரினவாத சக்திகள் பெரும் கூச்சல் இடத்தொடங்கிவிட்டன. வடக்கு கிழக்கில் சுனாமி பாதிப்பிற்குள்ளான பகுதியில்- கரையோரத்தில் இருந்து இரண்டு கிலோமீற்றர் தொலைவிற்கு ஒரு வருடகாலத்தில் மேற்கொளளப்படவுள்ள இப்புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கையே இப் பொதுக்கட்டமைப்பில் பணியாக இருக்கையில் இப் பொதுக்கட்டமைப்பில் விடுதலைப்புலிகளுக்கு தமிழீழமே கையில் கொடுக்கப்பட்டு விட்டதுபோல் இப் பேரினவாத சக்திகளின் கூச்சல் உள்ளது.

பேரினவாத சக்திகள் தமிழர் தொடர்பான விடயங்கள் எதற்கெடுத்தாலும் பெரும் கூச்சல் போடுவது வழமையானதே. இந்தவகையில் பொதுக்கட்டமைப்பு விவகாரத்திலும் அவர்கள் கூச்சல்போடுவது எதிர்பார்க்கத்தக்கதே. ஆனால் இக் கூச்சல்களையும் மீறி அரசாங்கத்தால் நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும். ஆனால் சனாதிபதி சந்திரிகா அவ்வாறு நடந்துகொள்வாரா? என்பதே இன்றுள்ள கேள்வியாகும்.

ஏனெனில் இவ் உடன்பாடு இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதியின்மை, வன்முறைகள் என்பனவற்றிற்கு முன்பாவே செய்து கொள்ளப்பட்டிருக்க முடியும். அதாவது சுனாமி அனர்த்தத்திற்கான மீள் கட்டமைப்புப்பணி அன்றி நிவாரணப்பணி என்ற ரீதியில் பெரிதும் அரசியல் முக்கியத்துவம் கொடுக்கப்படாதுஅன்றே இதனை நிறைவேற்றி இருக்க முடியும்.

ஆனால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அதனை அவ்வாறு மேற்கொள்ளவில்லை இப்புனர்வாழ்வு, புனரமைப்புப்பணியை அதுவும் வெளிநாட்டவரின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் பணியை ஓர் அரசியல் விவகாரம் ஆக்கினார். முதலில் பொதுக்கட்டமைப்பை நிராகரித்தார். பின்னர் மாற்றுத் திட்டங்கள் வைத்தார். பின்னர் திருத்தங்கள் செய்தார். பின்னர் இயன்றவரை தாமதப்படுத்தினார்.

இதற்கு ஜே.வி.பி. போன்ற கட்சிகளை ஆட்சியில் சேர்த்துக்கொண்டதும், ஜாதிகஹெல உறுமய பேன்ற கட்சிகளின் ஆதரவைப் பெற்று ஆட்சி நடத்தியதும் மட்டும் காரணம் என்பதல்ல சனாதிபதி சந்திரிகாவின் விருப்பமின்மை, எதிர்கால அரசியல் அபிலாசைகள் போன்றவையும் காரணமாகும். இதுவே இவ் உடன்பாடு இழுத்துச்செல்லப்பட்டதும், இன்று பெரும் விவகாரமாகியுள்ளமைக்கும் அடிப்படையாகும்.

ஆனால், இன்று உடன்பாடு பலத்த எதிர்ப்புக்குள்ளாகியுள்ளது. இதன் காரணமாக ஏற்கனவே பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. எதிர்க்கும். ஜே.வி.பி. போன்ற கட்சிகள் தமது தொழிற்சங்கங்களையும் போராட்டங்களில் இறக்கியுள்ளன.

அடுத்தகட்டத்தில் பிக்குகள், மாணவர்கள் போன்றவர்களையும் இதற்கு எதிரான போராட்டத்தில் இறக்கக்கூடும். பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவும் மதில் மேல் பூனையாகவே உள்ளது இந்தவகையில் இப் பொதுக்கட்டமைப்பு பெரும் சவாலை சந்தித்துள்ளது என்றே கூற முடியும். ஆனால் பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டமையினால், அது நிறைவு பெற்றது என அர்த்தம்கொள்ளத்தக்கதல்ல. அதன் நிறைவேற்றத்தைப் பொறுத்தே அதன் வெற்றி தங்கியுள்ளது. ஆனால் அதற்கான வாய்ப்பு நிலவுவதாகத் தெரியவில்லை. ஏனெனில் சனாதிபதி சந்திரிகா இப்பிரச்சினையை ஒரு எரியும் நெருப்பாக்கி விட்டே உடன்பாட்டை ஏற்படுத்திக்கொண்டுள்ளார்.

# அரசாங்கத்திடம் சகல அதிகாரங்கள் இருந்தும் இரு முறை பிரச்சினையை தீர்க்க முடியவில்லை!

### – எதிர்க்கட்சித் தலைவர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

சனாதிபதி, பிரதமர், பாராளுமன்றம், மாகாண சபைகள் போன்ற அனைத்திலும் அதிகாரங்கள் இருந்தபோதிலும் பொதுசன ஐக்கிய முன்னணியினாலும், மக்கள் விடுதலை முன்னணியினாலும் நாட்டின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒரு தடவை அல்ல இரண்டு தடவைகள் முடியாமல் போயுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அரநாயக்க திக்பிட்டியவில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும்போதே, எதிர்க்கட்சித் தலைவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார். மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி அன்றுநடவடிக்கை மேற்கொண்டபோது அரசாங்கத்தை சனாதிபதி சந்திரிகா கலைத்ததாகவும்எதிர்க்கட்சித்தலைவர் குறிப்பிட்டார்.2000ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தகுதிகாண் அரசாங்கத்தின் போதும், 2004 ஆம் ஆண்டு கட்டியெழுப்பப்பட்ட கூட்டமைப்பு அரசாங்கத்தின் போதும் இந்நாட்டு மக்கள் நிர்க்கதி நிலைக் குத் தள்ளப்பட்டதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தகுதிகாண் அரசாங்கத்தின் கீழ் அழிவடைந்ததேசத்தை பிரதமருக்கான அதிகாரங்களை மாத்திரம் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கக் காலத்தில் மீளக் கட்டியெழுப்பியதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நினைவு கூர்ந்துள்ளார்.

கடந்த 14 மாதகாலப்பகுதியில் மக்களுக்கு சேவையாற்ற முடியாமல் போனமைக்கு ஒருவருக்கு ஒருவர் இடையூறு ஏற்படுத்தியதே காரணம் என மக்கள் விடுதலை முன்னணியும், பொதுசன ஐக்கிய முன்னணியும் பரஸ்பர குற்றச்சாட்டுக்களை சுமத்தி பிரச்சினைகளைத் தீர்ப்பதிலிருந்து நழுவிச் செல்ல முற்பட்டதாகவும் அவர் கூறினார்.

போலி உறுதிமொழிகளை வழங்கி மக்களை ஏமாற்றாமல் அதிகாரத்தைவிட நாட்டைப் பற்றி சிந்திக்கும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை உருவாக்குவதற்காக சனாதிபதிக்கான தேர்தல் ஒன்றை நடத்த வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

# பேச்சுமூலம் சமாதானத்தை எட்ட முடியும்; சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா நம்பிக்கையாம்

### சனாதிபதி செயலகம் கூறுகிறது

(கொழும்பு)

நாட்டில் வாழும் சகல சமூகங்களினதும் உரிமைகளை உறுதிப்படுத்தக் கூடிய பேச்சுவார்த்தை மூலம் நியாயமான நிலையான சமாதானத்தை விரைவில் எட்ட முடியும் என சனாதிபதி சந்திரிகா நம்பிக்கை கொண்டுள்ளதாக சனாதிபதி செயலக ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சகலரும் பிரிவினைகளையும் அரசியல் முரண்பாடுகளையும் ஒதுக்கிவைத்துவிட்டு சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களின் துயரங்களைத் துடைப்பதற்கு முன்வரவேண்டுமென சனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கான ஒரு சாதாரண நிர்வாக ஏற்பாடாகவே சுனாமிக்குப் பின்னரான நடவடிக்கை, முகாமைத்துவ கட்டமைப்பு ஆவணம் கைச்சாத்திடப் பட்டுள்ளதாக சந்திரிகா தெரிவித்துள்ளார்.

இந்த ஆவணம் தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினர், அரசியல் வாதிகள், சமயத்தலைவர்கள், சமூகத் தலைவர்கள் ஆகியோருக்கு கடந்த சில வாரங்களாக சந்திரிகா விளக்கிக் கூறியுள்ளார் எனவும் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இந்த நிர்வாக ஏற்பாட்டிற்கு சனநாயக நெறிமுறைகளையும் மீறி எதிர்ப்புக் கிளப்பப் பட்டமையால் தாம் கவலையடைந்ததாகவும் சந்திரிகா குறிப்பிட்டுள்ளார்.

சனநாயக நெறிமுறைகளுக்கு அமைய இந்த ஆவணம் விவாதத்திற்காக நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதாகவும் பாராளுமன்றத்தில் குழப்ப நிலை ஏற்பட்டதால் விவாதம் இன்றி பாராளுமன்றம் ஒத்திவைக்கப் பட்டதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொதுக்கட்டமைப்புக்கு ஒத்துழைப்பதில் முஸ்லிம் காங்கிரசுக்கு முரண்பாடு

பொதுக் கட்டமைப்பினை நடைமுறைப்படுத்தப்படும் போது தமது ஒத்துழைப்பினை வழங்குவது தொடர்பில் சில முரண்பாடுகள் இருப்பதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப்ஹக்கீம் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்

கைச்சாத்திடப்பட்ட பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம் மக்களின் கருத்துக்கள் உள்வாங்கப் படவில்லை. எனக் குறிப்பிட்டார்.

முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் பேச்சு நடத்தப்பட்டிருந்தால் சனாதிபதிக்கு முஸ்லிம் மக்களின் உரிமைகளை விளக்கியிருக்கலாம்.எனினும் அவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்ளப் படவில்லை எனவே உடனடியாக பொதுக்கட்டமைப்பில் சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். இந்த நிலையில் அது தொடர்பான பேச்சுவார்த்தைகளில் தாம் தனித் தரப்பாக கலந்துகொள்ளத் தயாராக உள்ளதாக ஹக்கீம் குறிப்பிட்டார்.

# புதிய அரசியல் கூட்டமைப்பு; ஜே.வி.பி அடுத்தவாரம் நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையின் அரசியலில் புதிய கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தும் முனைப்புக்கள் அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக. ஜே. வி. பியின் பாராளுமன்ற உறுப்பினர் நந்தன் குணதிலக தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர்,புதிய கூட்டமைப்பை அமைப்பது தொடர்பாக ஏனைய அரசியல்கட்சிகளுடன் பேச்சு நடத்த தமது கட்சி தீர்மானித்துள்ளது எனக் குறிப்பிட்டார்.

முற்போக்கு சக்திகளுடன் இவ்வாறான சந்திப்புக்களை நடத்த வேண்டிய அவசரம் குறித்து தமது கட்சி உணர்ந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்

# பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக ஜே.வி.பி.நாளை வழக்குத்தாக்கல்

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்புக்கு எதிராக நாளை வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக ஜே.வி.பி. அறிவித்துள்ளது. ஏற்கனவே பொதுக்கட்டமைப்பை சட்டபூர்வமற்றது எனத் தெரிவித்துள்ள ஜே.வி.பி அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்திருந்தது.

இந்த ஒப்பந்தம் சிறிலங்காவின் அரசமைப்புக்கு எதிரானது என்றும் அது தெரிவித்துள்ளது.

அரசும் புலிகளும் செய்து கொண்ட பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கைதொடர்பாக ஜே.வி.பியின் நிலைப்பாட்டை விளக்குவதற்காக பாராளுமன்றக்கட்டடத் தொகுதியில் செய்தியாளர் மாநாடொன்றை கட்சியின் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்ச நடத்தியபோதே இதனைத் தெரிவித்தார். அங்கு தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், இந்தப் பொதுக்கட்டமைப்புப்பற்றி அரசு விவரிக்கும் போது ஒரு பிரதேச சபைக்குரிய அதிகாரம் கூட அதற் குக்கிடையாது என்று கூறிவந்தனர். ஆனால் வெளிநாட்டுநிதிகளை நேரடி யாகப் புலிகள் கையாளும் விதத்தில் ஒப்பந்தம் தீட்டப்பட்டுள்ளது. எனத்தெரிவித்தார். (32)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# ஜே.வி.பி.க்கு எதிராக சட்ட நடவடிக்கை

# சனாதிபதி சந்திரிகா ஆலோசனை

(கொழும்பு)

தேர்தல் உடன்படிக்கையை மீறி ஜே.வி.பி.யினர் செயற்படுவது பற்றி சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சட்ட ஆலோசனைகளைப் பெற்று வருவதாக சனாதிபதி மாளிகை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கூட்டணி அரசாங்கத்திலிருந்து ஜே.வி.பி. விலகிய பின்னர் அதன் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தினுள் செயற்படும் முறை தொடர்பாக சனாதிபதி சட்ட ஆலோசனைகளைப் பெற்றுள்ளதாகவும் தனது அரசியல் அமைப்பு ஆலோசகர்களுடனும் சட்ட வல்லுநர்களுடனும் கடந்த சில தினங்களாக இது பற்றி பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை அவர் நடத்தியிருப்பதாகவும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சின்னத்தின் கீழ் தேர்த லில் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினர்களாக பதவியேற்ற இந்த உறுப்பினர்கள் தற்போது அரசாங்கத்தின் முடிவுகளுக்கு எதிராக செயற்படுவது கூட்டணி உடன்படிக்கையை மீறும் செயல் என்பது சனாதிபதியின் கருத்து.

கூட்டணி உடன்படிக்கையை மீறுபவர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கைகளை எடுக்க கூட்டணியின் செயலாளருக்கு அதிகாரம் உண்டு என்று சனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியுள்ள சட்ட வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும், கூட்டணியின் செயலாளர் பதவியைப் பயன்படுத்தி சனாதிபதி கடும் நடவடிக்கைகளை எடுப்பாராயின் தற்போதைய பிரச்சினைகள் மேலும் சிக்கலடையும் என்றும் சனாதிபதியின் அரசியல் ஆலோசகர்கள் சனாதிபதியிடம் கூறியுள்ளனர்.

இருப்பினும் பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்ட பின்னர் ஏற்படக் கூடிய நிலைமைகளுக்கு அமையதான் நடவடிக்கைகளை மேற்கொள்ள சனாதிபதி முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பான பிரேரணையை நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுப்பதற்கு ஜே.வி.பி. மற்றும் ஏனைய சில கட்சிகள் இடமளிக்காத நிலையில் நேற்று முன்தினம் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது. பாராளுமன்றம் மீண்டும் ஜூலை ஐந்தாம் திகதி கூடும்போது இதன் மீது மீண்டும் விவாதம் நடத்தப்பட வேண்டிய அவசியமில்லை என சனாதிபதி தீர்மானித்திருப்பதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

## வெலிக்கந்தை கவச வாகன படைத்தளத்தில் துப்பாக்கிச் சூடு; இராணுவச் சிப்பாய் பலி!

(கொழும்பு)

வெலிக்கந்தை ஏழாவது கவச வாகனப் படைத் தளத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் இடம் பெற்றுள்ளது.

எனினும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திற்கான காரணங்கள் குறித்து தகவல்கள் எவையும் வெளியாகவில்லை. (32)

## பொதுக்கட்டமைப்பை ஆதரித்து பொத்துவிலில் மக்கள் பேரணி

(அம்பாறை)

சிறிலங்கா அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் கைச்சாத்திட்டுள்ள பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவு தெரிவித்து நேற்று அம்பாறை மாவட்டம் பொத்துவில் பிரதேசத்தில் கடற்றொழிலாளர்கள் பேரணி நடத்தினர்.

மாவட்ட கடற்றொழில் பேரவையும், தேசிய கடற்றொழில் ஒத்துழைப்பு அமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்த இந்தப் பேரணி பாசறைச் சேனையிலிருந்து புறப்பட்டு பிரதேச செயலகத்தை சென்றடைந்தது.

அங்கு சனாதிபதிக்கான மனு அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டது.

அப்பிரதேசத்தைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான தமிழ், முஸ்லிம், சிங்கள கடற்றொழிலாளர்கள் இதில் கலந்து கொண்டனர். பொதுக்கட்டமைப்பிற்குள் முஸ்லிம்களின் பிரச்சினையும் உள் வாங்கப்பட வேண்டும்.

200 மீற்றர் கடல் பாதுகாப்பு வலயம் கைவிடப்பட வேண்டும்; பொத்துவில் பிரதேசத்தை சுற்றுலா பிரதேசமாக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகள் கைவிடப்பட வேண்டும்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப் பட்டவர்களுக்குரிய இழப்புக்கள் உடனடியாக வழங்கப்பட வேண்டும் ஆகிய முழக்கங்கள் இப் பேரணியில் எழுப்பப்பட்டன.

## பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கை சமாதானப் பேச்சுக்கு உந்து சக்தி!

### கனேடிய அரசாங்கம் நம்பிக்கை

(ரொரன்ரோ)

முடங்கிப்போய் இருக்கும் அமைதிப் பேச்சுவார்த்தைகளுக்கு ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பானது உந்து சக்தியாக அமையும் என்று கனேடிய அரசு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இது குறித்து கனேடிய வெளிவிவகார அமைச்சர் பியரிபெட்டிக்ரியூ மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்கான அமைச்சர் அய்லென் கரோல் ஆகியோர் கூறியதாவது; இப்பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டதை வரவேற்கிறோம். இலங்கையில் வடக்கு-கிழக்குப் பகுதியில் மீளமைப்புத் திட்டப் பணிகளின் தேவைகளையும் அவற்றுக்கான அங்கீகாரத்தையும் பணிகளின் கண்காணிப்பையும் தமிழீழ விடுதலைப்புலிகளும், சிறிலங்கா அரசும் மேற்கொண்டிருக்கும் இந்த ஒப்பந்தம் மூலம் நடைமுறைப் படுத்த முடியும்.

கடுமையான எதிர்ப்புகளுக்கு மத்தியில் மிக உறுதியான நிலைப்பாட்டுடன் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளார். முஸ்லிம் தரப்பினருக்கும் உரிய பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டிருப்பதனை நாம் வரவேற்கின்றோம்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப் படும் பணிகள் வெளிப்படையாகவும், செழுமையாகவும், சமமான பகிர்வுடனும் மேற்கொள்ளப்பட இந்த ஒப்பந்தம் ஒரு முக்கிய காரணியாக விளங்கும்.

இருப்பினும், இலங்கையின் அரசியல் மற்றும் மனித உரிமைகள் நிலை குறித்து நாம் கவலை கொள்கிறோம். இந்த ஒப்பந்தம் ஒரு சாதகமான நிலையை உருவாக்கக் கூடும் எனக் கருதுகிறோம் என்று அவர்கள் கூறினர்.

## பேரவைத்தலைவர் இல்லம் மீதான தாக்குதல்; திருமலை தேசிய எழுச்சிப் பேரவை கண்டனம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் வ.விக்னேஸ்வரனின் இல்லத்தின் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் தமிழ்த் தேசியத்திற்கு எதிரான சக்திகளின் கோழைத்தனமான வெளிப்பாடேயாகும் என்று திருகோணமலை மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவை கண்டித்துள்ளது. தேசிய எழுச்சிப் பேரவை நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது; தமிழ் மக்களுக்கு எதிராக பல்வேறு வகைகளிலான அநீதிகளை இழைத்து வரும் சிங்கள ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக திருகோணமலை மக்கள் சார்பாக குரல் கொடுத்து வருபவர் விக்னேஸ்வரன். துணிச்சல் மிக்க அந்தத் தமிழ் மகன் மீதோ அல்லது தமிழ் உணர்வாளர்கள் மீதோ இவ்வாறான தாக்குதல்களை செய்ய முன்வரும் தேச விரோதக் குழுக்கள் ஒன்றை உணர வேண்டும். இப்படி யான சம்பவனங்கள் எந்த உணர்வு மிக்க தமிழரை எதுவும் செய்துவிடப் போவதில்லை. தமிழ்த் தேசியம் நிமிர எந்தச் சவால்கள் வந்தபோதும் முன் னின்று உழைப்போம். இத்தகைய சம்பவங்கள் எமது உணர்வுக்கு உரமேற்றுமே தவிர உணர்வுகளை ஒடுக்கிவிடப் போவதில்லை என்பது உண்மை. இவ்வாறு திருமலை மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (25)

### ஆழிப்பேரலை....

விரிவாக உள்வாங்கிக் கொண்டு அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்வோம். அந்தச் சூழ் நிலையில் தான் அரசிலிருந்து வெளியேறுவதா? இல்லையா? என்பது குறித்து முடிவு செய்வோம். ஜூலை மாதம் 5ஆம் திகதி பாராளுமன்றத்தில் எமது நிலையை விளக்குவோம்.

இதனிடையே நேற்று சம்மாந்துறையில் எமது தேசிய ஐக்கிய முன்னணி சார்பில் பொதுக் கட்டமைப்பு தொடர்பான பேரணி நடத்தப்பட்டுள்ளது என்றார் அவர்.

### அரசு-...

துரையாடவிருப்பதாகவும், பொதுக் கட்டமைப்பு ஒப்பந்தத்தை தோற்கடிக்கும் இந்தப் போராட்டங்களை நடாத்தப் போவதாகவும் ஜே.வி.பி சார்பு தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிக்கின்றன.

தாம் முன்னெடுக்கும் எதிர்ப்புப் போராட்டங்கள் தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாட்டைப் பொறுத்தே அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக தீர்மானிக்கவிருப்பதாக அகில இலங்கை தொழிற்சங்க கூட்டமைப்பின் பொதுச்செயலாளரும், ஜே.வி.யின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பியசிறி விஜயநாயக்க கூறியுள்ளார். இதே வேளை பொதுக் கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்த நேற்று முன்தினம் நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றிருந்மை குறிப்பிடத்தக்கது.

### சர்வதேச....

தேசிய ரீதியில் புதிய சாதனையை நிலைநாட்டி தென் கொரியாவில் நடைபெறவுள்ள 16ஆவது ஆசிய மட்ட மெய் வல்லுனர் போட்டியில் பங்கு கொள்வதற்காகச் செல்லும் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த ரவீந்திரன் - றதீசன் (வயது-22) என்ற விளையாட்டு வீரர் கௌரவிக்கப்பட்டார்.

அடுத்ததாகஇலங்கை தேசிய கனிஷ்ட் மெய் வல்லுனர் போட்டியில் பங்கு கொண்டு 100 மீற்றர் ஓட்ட நிகழ்வில் போட்டியிட்டு 11.1 நிமிடத்தில் ஓடி முடித்து கனிஷ்ட சாதனையை சமப்படுத்தி நான்காவது சர்வதேச மெய் வல்லுனர் சம்மேளனத்தால் நடத்தப்படுகின்ற உலக இளையோர் மெய் வன்மைப் போட்டிக்கு தெரிவாகி மொறோக்கோ நாட்டில் நடைபெறவுள்ள 160 நாடுகள் பங்கு பற்றும் 2000 அதிகமான போட்டியாளர்கள் கலந்து கொள்ளும் விளையாட்டுப் போட்டியில் இலங்கையின் தேசிய வரலாற்றில் முதல் முறையாக தமிழர் தாயகத்தில் இருந்து கலந்து கொள்ளும் போட்டியாளரான திருகோணமலையைச் சேர்ந்த கே. முகமட் காரீஸ் (வயது 17) என்ற விளையாட்டு வீரரையும் இவர்களை பயிற்று வித்த பயிற்சியாளரான விஜயநீதன் ஆகிய மூவரையுமே காவல் துறைப் பொறுப்பாளர் நினைவுப் பரிசு வழங்கிக் கௌரவித்தார்.

இந் நிகழ்வில் கலந்து விளையாட்டு வீரர்களுடனும் பயிற்றுவிப்பாளருடனும் உரையாடிய தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள சுமைகளைத் தாண்டி விளையாட்டில் சாதனை படைத்து பெருமை சேர்த்த உங்களது முயற்சி பாராட்டுதற்குரியது. எமக்கு பெருமையாக உள்ளது. உங்களைப் போன்ற திறமையானவர்களையும் முயற்சி உடையவர்களையும் சிறந்த சாதனையாளர்களாக்குவதற்காகவே விளையாட்டுத் துறையை உருவாக்கியிருக்கின்றோம். இதன் மூலம் உங்களைப் போன்ற திறமைசாலிகள் நிச்சயம் இனங்காணப்பட்டு சாதனையாளர்களாக உருவாக்கப்படுவார்கள் எனத் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர். சி.பாப்பா இணைப்பாளர். சு. இன்பன் விளையாட்டுத் துறைத் தலைவர் பத்மநாதன் விளையாட்டுத் துறை ஆலோசகர் குணரட்ணம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (லோ)

### பேரவைத்....

தொடர்பாகவும், பொதுக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்த தமிழ் மக்கள் பேரவையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளால் ஆத்திரமடைந்தோரே இந்த விதமான செயல்களில் ஈடுபட்டுள்ளனர்.

எல்லாத் தமிழர்களை யும் அச்சுறுத்தும் நோக்குடனேயே இந்தத் தாக்குதல் இடம் பெற்றிருக்கலாம் எனவும். இந்த நிலை தொடர அனுமதிக்க முடியாது எனவும், இது தொடருமேயானால் சம்மந்தப்பட்டவர்கள் பாரிய விளைவு களை எதிர் நோக்க வேண்டிவரும் எனவும் எழிலன் தெரிவித்துள்ளார். (25)

**தவறி விட்டது**

கிருஸ்ணன் குமரகுரு , 432/2 மடம் வீதி யாழ்ப்பாணம் என்ற பெயர் முகவரியுடைய தேசிய ஆள் அடையாள அட்டையும், சேரலாதன் என்ற பெயருடைய பிரிவு அடையாள அட்டையும் அடங்கிய மணிபேஸ் இன்னும் சில ஆவணங்களுடன் முள்ளியவளை காட்டு விநாயகர் வீதிக்கும் மாமூலை ஊர்தி திருத்த வீதிக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் முள்ளியவளைப் பிரதேச அரசியல் துறையிலோ அல்லது முள்ளியவளையில் உள்ள சிறி மருத்து வமனையிலோ அல்லது மாமூலையில் உள்ள ஊர்தி திருத்தகத்திலோ தயவு செய்து ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் (சன்மானம் வழங்கப்படும்)

தகவல்
கி.குமரகுரு

(சி.12262)

### பத்து....

வந்து போராட்டம் நடத்துவதென அக்கட்சி முடிவ செய்துள்ளதாக ஐ.தே.க. வட்டாரங்கள் கூறுகின்றன. நாட்டின் தற்போதைய நிலையில் சனாதிபதித்தேர்தல் அவசியம் எனக்கருதும் அனைவரும் இந்தப் போராட்டங்களில் கலந்து கொள்ளலாம் என்று ஐக்கிய தேசியக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

**கண்ணீர் அஞ்சலி**

**காராளசிங்கம் சசிரேந்தன்**

24.06.2005 அன்று அகால மரணமடைந்த எமது கழக அங்கத்தவர் காராளசிங்கம் சசிரேந்தன் அவர் களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியினை தெரிவிப்ப தோடு, அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின் றோம்.

தகவல்
நண்பர்கள்
விளையாட்டுக்கழகம்
உடையார் கட்டு.

(6178)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 திகதி அச்சிட்டு வெியிடப்பபட்டது